தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 10—12—55 | சனிக்கிழமை | இதழ் 26

இலக்கியத்தில் காதல்

மனித மனத்திற்கு அலையெழுப்பும் சக்தி அதிகம். ஆயிரம் ஆயிரம் சிந்தனை அலைகள்-இன்பம் பயப்பன சில, துன்பந் தருவன சில; குழப்பம் கொடுப்பன பல! இத்தனை சிந்தனைகளையும், மனிதன் தன் இதயமாகிய ஒரே உலைக்களத்திற்குட் போட்டு உருட்டிக்கொண்டிருக்க விரும்புவதில்லை. அவற்றில் சிலவற்றை, உயிருக்குயிரான நண்பனிடமோ, காதலியிடமோ, மனைவியிடமோ சொல்லிப் பகிர்ந்து கொள்ள விரும்புகிருன். அதில் ஒரு ஆறுதலையும் பெறுகிருன். பெண்களும் அப்படித்தான், நெருங்கிய தோழியருடனே தங்கள் எண்ணங்களைப் போட்டு விளையாடி மகிழத்தான் அவர்களும் விரும்புகிருர்கள். அதிலும் இந்தக் காதலிருக்கிறதே, அதுதான் பேச்சுக்கு எவ்வளவு ரசமாக இருக்கிறது! அனுபவித்த இன்பத்தை அதே அளவில் பங்கீடு பண்ணி, வேண்டியவர்களிடம் சொல்லுவதுதான் இன்பங்களிலெல்லாம் தலையாயது என்ருல் கூட மிகையாகாது! பழைய இலக்கியங்களிலிருந்து இன்றைய இலக்கியங்கள் வரை அத்தனை இலக்கியங்களிலும் காட்சிதரும் தலைவியரும், "தோழீ கேளாய்!" என்று துவங்கித் தங்கள் அனுபவத்திற்கு விளக்கம் படைக்கிருர்களே, ஏன்? அதைப் படிக்கப் போகிற ரசிகனிடமே ஏன் கூறக்கூடாது? காரணம் இதுதான்; நெருங்கியவர்களிடம் சொல்வதாகத் துவங்குகிற எந்த இலக்கியமும் இதயத்தை முழுக்கத் திறந்து காட்டும்!

முத்தொள்ளாயிரம் முழுக்க அப்படித்தான்! மூன்று நாட்டுத் தலைவிகளும் தோழியரைக் கூப்பிட்டு பல சுவையான சேதிகளைக் கூறுகிருர்கள். அனுபவமில்லாத அந்தத் தோழிகள், அந்த அனுபவத்தைத் தாங்களும் பெற விரும்பி, ரசித்துக் கேட்கிருர்கள். குறுக்கே கேள்வி கேட்டு அந்தச் சுவையை அதிகப்படுத்துகிருர்கள்.

ஒரு தலைவி; கரையுரிஞ்சி மீன் பிறழும் காவிரிக்கரைக் கன்னி: முல்லை நிகர் பல்லும், வில்லை நிகர் நுதலும், அல்லை நிகர் கூந்தலும் வல்லை நிகர் தனமும் இல்லையெனும் இடையும் கொண்டு, சில்லென்ற எழில் காட்டும் சேயிழையாள்! "ஓடு பிளந்த செம்மாதுளை போல், உதட்டில் உள்ளம் விளைத்த நகை மின்னவும், காதோரத்து வண்டுவிழி ஓடை மலர்முகத்தில் ஓடி உளங்கவர்ந்து தின்னவும், காடு சிலிர்க்கும்படி மேலாடு முந்தானை காற்றோடு காற்ருகப் பின்னவும், காதற் கரும்பொன்று காலிற் சிலம்பணிந்து" நடந்ததோ என்னவும்-நடந்து வந்து தன் தோழியினருகில் நின்று ஓரக்கண்ணுல் அவளை ஒய்யாரமாகப் பார்த்தபடி மெதுவாகத் துவங்குகிருள்.

"அடி தோழீ! என் காதலனைப் பார்த்தேனடி!"

"பார்த்து?"

"கனிமொழிகள் பெற்றேனடி!"

"அப்புறம்?"

"ஊடல் புரிந்தேனடி!"

"பின்!"

"உரமார்பில் சாய்ந்து வெகு நேரம் கிடந்தேனடி!"

"தொடர்ந்து...?"

"கலவியமுதம் கண்டேனடி!"

"வாழ்க! அகோ என் தலைவி! அந்தச் சுவை நீ பெற்றமைக்காக பல்லூழி வாழ்க! ஆனுல், அடியாளுக்கொரு சந்தேகம்......திருவளர் செல்வியாம் சோழ பூமிப் பாவையார் அனுமதி தந்தால் கேட்க ஆசை...!"

"கேளடி, குறும்புக்காரி!"

"உன் காதலன் முகத்தை நன்ருகப் பார்த்தாயா! கண்ணாரப் பருகினையா!"

"இல்லையடி!"

"சரிதான் போ! இவ்வளவு காரியங்கள் நடத்திவிட்டு வந்திருக்கிருய்! முகம் பார்க்கவில்லை என்கிருயே! பைத்தியக்காரி! கண்களைக் கட்டிக்கொண்டு காதல் புரிந்தாயா!"

"ஊகூம்......அதாவது......அதாவது..."

"எதாவது!"

"எப்படியடி ஏறிட்டுப் பார்ப்பது!......என்ருல், தாளமுடியவில்லையடி!"

"அவ்வளவு பெரியவரா! சரி! ஊடல்புரிந்தேன் என்ருயே, அப்போது ஓரக்கண்ணுலாவது பார்த்தாயா?"

(10-ம் பக்கம்)

இலங்கைக் காட்சிகள்



சீவகன்காதல்

காட்சி 2.

இடம் : அந்தப்புரம்.

நேரம் : இரவு.

[மீண்டும் சந்திப்பதாக குணமாலையிடம் விடைபெற்றுக்கொண்டு காந்தருவதத்தையின் அந்தப்புரத்திற்கு வருகிறான் சீவகன். அங்கே காந்தருவதத்தை இல்லை. உடனே தூரிகையும் வண்ணக்குழம்பும் கொண்டு குணமாலையின் உருவத்தை ஓவியமாகத் தீட்டுகிறான் சீவகன். அதைப் பார்த்தபடி தனக்குத்தானே பேசுகிறான்]

சிவ : "பொன்னார் கொடியே புகழிற் புகழ்ஞாலம்
நின்வாள் நெடுங்கண் விலையாகும் நிகர்த்தே!"

"போது லாஞ்சிலை யோ! பொரு வேற்கணோ!
மாது லாமொழி யோ! மட நோக்கமோ!
யாது நானறி யேன்! அணங் கன்னவள்
காத லாற்கடை கின்றது காமமே!"

—பதுமையாரிலம்பகம்.

"பூவார் புனலாட்டினுட் பூநறுஞ் சுண்ணம்
பாவாய்! பணைந்தோள் சுர மஞ்சரி தோற்றாள்!
காவா தவள்கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்
ஏவோ அமிர்தோஎனக் கின்றிது சொல்வாய்"

பிறை நிகர்த்த பெருமாட்டி! கொன்றை உதிர்ந்ததுபோல் இன்று நீ உதிர்த்த செவ்வாய் மொழிகளெல்லாம் எவ்வாறு நான் மறப்பேன்! தாவி அருகணைந்து தங்கம்நிகர் முகம்சேர்த்து மேவி இதழ் சுவைத்து மென்மொழியில் புவி மறந்தேன்! 'காவியத்துச் செய்தி எலாம் கன்னி உருக்கொண்டதுவோ! ஓவியத்து வண்ணமெலாம் ஒருடலில் ஒதுங்கியதோ; வாவி தரும் குளிர்ச்சி எலாம் வந்து குடி ஏறியதோ? ஆவி குடியேறி என்னை ஆட்கொள்ள வந்தாயோ?' என்றேன் பலவாறு. எல்லாமும் கேட்டிருந்தாய். வந்தேன் பிரிந்து! வாழ மனம் இல்லையடி! செந்தாழம்பூவே! சேல்விழியே! அற்புதமே! கண்டாரைக் கொல்லும் காந்தச் சிலைவடிவே! வண்டாடும் கூந்தல்வளைவை அனுசரித்து கொண்டாடிக் கொண்ட சுகம் கோடியெனில் குறைவாமே!

[பின்னாலேயே காந்தருவதத்தை வருகிறாள், சீவகன் அதைக் கவனிக்காமல் தனக்குத் தானே பேசிக்கொண்டிருக்கிறான்.]

ஒய்யார வண்ணமயில் ஓய்வெடுத்துக் கொண்டதுபோல் கையே தலையணையாய், கன்னி நீ சாய்ந்திருக்க, மெய்யோ புவனத்தின் விந்தையெலாம் காட்டிநிற்க, பைய அருகில் வந்து, நான் பருகிவிட்ட இன்பசுகம், ஐயோ இனி மறந்தால் ஆவி நிலைக்காதே!

காந் : எப்படி நிலைக்கும்! கைப்பிடித்த கன்னியர்பால் கற்பனையைச் சிந்தவிட்டு மற்றொருத்தி வந்தாக்கால் மனதை நடக்கவிட்டு, போகுமிடமெல்லாம் புதுச்சுவைக்குத் திட்டமிட்டு, ஆகங் கலந்திருக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்கு சொந்த நினைவேது? இருந்தாலல்லவோ மறப்பதற்கு!

சிவ : ஆ! காந்தருவதத்தை! நீயா?

காந் : அப்படிக் கேளுங்கள்! 'நீயே' என்ற காலம் போய் 'நீயா' என்னும் காலம் வருகிறது, சாயாத தனம் படைத்த புதுத் தையலரைக் கண்டுவிட்டால்!

சிவ : (திகைத்து, சமாளித்து) இல்லை...! உன் உருவைத்தான் எழுதிக்கொண்டிருந்தேன்!

காந் : என் உருவா இது!

சிவ : நன்றாகப் பார்!

[காந்தருவதத்தை அதைக் கூர்ந்து பார்த்துவிட்டு அலட்சியமாகச் சிரித்து.]

காந் : இப்பொழுது முத்தமிட்டதுபோல் அந்த உதடுகள் வெளுத்திருக்கின்றனவே, சமீபத்தில் எப்போது நீங்கள் என்னைச் சந்தித்தீர்கள்?

சிவ : இன்று பகற்போது......?

காந் : அப்போது நாம் அம்மானை ஆடினோம்.

சிவ : தப்பிவந்த பந்தை, நீ தாவிப் பிடித்தபோது......

காந் : கைப்பிடியாகப் பிடித்தீர்கள், கன்னத்தில் அடித்தீர்கள்!

சிவ : ஆ! இப்போது நினைவிற்கு வருகிறது! இந்த ஓவியத்தில் இருக்கும் பெண் ஒரு கிளியை எடுத்து முத்தம் கொடுத்தாளாம்! அது கோவைப்பழமென்று அவள் உதட்டைக் கொத்திவிட்டதாம்!

காந் : அப்படி வாருங்கள் வழிக்கு! அப்படியானால் இந்த ஓவியத்தில் இருப்பது என் உருவம் அல்லவே!

சிவ : (திகைத்து, திணறி) காந்தருவதத்தை! ஏதோ, குழப்பத்தில் நான் என்னென்னவோ உளறிவிட்டேன்!

காந் : (சிரித்து) நீங்கள் உளறியதால் தானே, 'இது புதிய காதல்' என்று கண்டுபிடித்தேன்.

சிவ : (அவளைச் சமாதானம் செய்யும் முறையில்) ஆமாம்! ஒரு பெண், குணமாலை என்று பெயர். அவளுக்கு மணமாலை சூடி......

காந் : மடியில் கிடத்தி......

சிவ : பலபடப் பாராட்டி......

காந் : பல் பதிய வைத்து......

சிவ : சிலநாழி இருந்தேன்......

காந் : 'சில்'லென்று குளிர்ந்தது......

சிவ : பிரிந்து வந்துவிட்டேன்......

காந் : தொடர்ந்து வருகிறது நெருப்பு...!

சிவ : மறக்க முடியவில்லை, ஓவியம் தீட்டினேன்! என்றாலும் அவளைவிட அதிகமாக உன்னை நான் விரும்புகிறேன்.

காந் : சரி, சரி! ஈடுகட்டிப் பார்ப்பதற்கு இன்னொருத்தி கிடைத்துவிட்டாள்!

சிவ : மாலை சூடிக்கொள்கிற மனிதன், அதிலிருக்கும் எல்லா மலருக்கும் ஒரே மதிப்புத்தான் கொடுக்கிறான். ஆனாலும், அதில் தொங்குகிற செண்டைத் தொட்டுத் தொட்டுப் பார்க்கிறான். என் மாலையில் மலர்கள் பல இருந்தாலும் அதற்கு வண்ணம் கொடுக்கும் செண்டு நீதான்!

காந் : (திரும்பி) உண்மைதானா?

பதுமுகன் : (வந்தபடி) அப்படிக் கேளம்மா! எங்கே இது எல்லாவற்றையும் உண்மையென்று நம்பிடுவாயோ என நினைத்தேன்!

சிவ : வந்துவிட்டாயா அப்பா! வா! கொஞ்சம் கலகம் செய்துவிட்டுப் போ!

பது : ஆனாலும் ஒன்று, காந்தருவதத்தை! சீவகனை நீ நம்பலாம்! இவன் பரம யோக்யன்!

காந் : அப்படிச் சொல்! வேலிக்கு ஓணான் சாட்சி!

பது : விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதுதானே உலகில் காணப்படும் ஒரே காட்சி! கேள்! காதலிக்கிறான் பல பெண்களை; கடிமணமும் செய்துகொள்ளுகிறான் என்று கவலைப்படுவாய் நீ! அது உண்மையாய் இருந்தாலும், சீவகன் பிறன்மனை நயவாத பேராண்மை உடையவன். எப்படி என்று கேட்பாய்! சொல்கிறேன், கேள்! சீவகன் ஒருநாள் காட்டின் வழியே வந்துகொண்டிருந்தான். அப்போது பவதத்தன் என்பவனும் அவன் மனைவி அநங்கமாவீணை என்பாளும் எதிரே சிறிது தூரத்தில் வந்துகொண்டிருந்தார்கள். பவதத்தன் சீவகனைப் பார்க்கவில்லை. ஆனால் அநங்கமாவீணை கண்டுவிட்டாள். கண்டவள் மயங்கினாள், இந்தக் காளையின் அழகில்! அருகில் வரும் கணவனைப் பார்த்தாள். 'ஐயோ நா வரளுகிறதே! தண்ணீர் வேண்டுமே' என்று கதறினாள்; கணவன் தண்ணீர் கொண்டுவர ஓடினான். தனித்து வந்த சீவகனிடம் இனித்த வார்த்தைகள் பல பேசி 'தணித்துவிடு என் காதலை' என்றாள் அந்த அநங்கமாவீணை!

சிறுநுதல் புருவம் ஏற்றாச் சேர்துகில் தானை சோர
அறியுநர் ஆவி போழும் அநங்கன் ஐங்கணையும் எய்தாள்

அந்தக் கீழ்த்தரச் செயலுக்கு சீவகன் ஒப்பினானா? அவளைக் கடிந்தான். புத்திமதிகள் கூறினான். மெதுவாக நழுவி வேறு பக்கம் சென்றுவிட்டான். அநங்கமாவீணையும் வேறுபக்கம் போய்விட்டாள். பவதத்தன் அவளைக் காணாது 'காதன் மாமன் மடமகளே' என்று கதறி தேட ஆரம்பித்தான். சீவகன் அவனைக் கண்டான். தன்னைக் காதலித்தவள் அவனுடைய மனைவிதான் என்பதைத் தெரிந்துகொண்டான். உண்மையை அவனிடம் சொல்லலாமா? சொன்னால் அவர்கள் வாழ்வு பாழாகிவிடாதா? ஆகவே, பொதுவாகப் பெண்களைப் பற்றிய ஒரு தத்துவத்தை அங்கே விரித்து வைத்தான்.

"பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா
உண்ணிறை உடைய அல்ல ஓராயிர மனத்த வாகும்
எண்ணிப்பத் தங்கை யிட்டால் இந்திரன் மகளும் ஆங்கே
வெண்ணெய்க்குன் றெரியுற் றாற்போல்
மெலிந்துபின் நிற்கு மன்றே"

—என்று கூறிவிட்டு 'இந்த வழியே ஒரு பெண் போனாள், அவள் உன் மனைவியாக இருக்கலாம், பார்த்துவிட்டுப் போ' என்று அனுப்பிவைத்தான். எப்படி?

காந் : நம்புகிறேன் உன் வார்த்தையை! என் நாதன் அவ்வளவு உயர்ந்த பண்புகள் கொண்டவர் என்பது எனக்குத் தெரியும்! ஆனாலும் சக்களத்தி என்று ஒருத்தி வந்துவிட்டால், தாளமுடியவில்லையே மனம்!

சிவ : குணமாலை உன் சக்களத்தி அல்ல, சகோதரி!

[என்று காந்தருவதத்தையை நெருங்குகிறான்.]

பது : ஏ! ஏ! நில்லு! நான் போய்விடுகிறேன். பிறகு நடத்து! என் காதலி எனக்காகக் காத்துக்கொண்டிருப்பாள்!

[என்று ஓடுகிறான். சீவகனும் காந்தருவதத்தையும் சிரிக்கிறார்கள். இருளை இதழ் மறைக்கிறது.]

(முற்றும்)

கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 2 | 10-12-55 | இதழ் 26

துன்பக்கேணி!

பெருமழை!
பேய்க்காற்று!
வீடுகள் சாய்ந்தன!
விளக்குத் தூண்கள் வீழ்ந்தன!
மாடுகள் செத்தன!
மழலைச்செல்வங்களைக் காணவில்லை!
தென் மாவட்டங்களில் பிணக்காடு!
தென்பாண்டியும் சோழமும் சாவுவீடு!

இந்தக் கிழமை முழுதும் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கும் போது நமக்குத் துக்கம் தாளமுடியவில்லை. மதுரை, ராமனுதபுரம், தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இயற்கையின் திருவிளையாடல், தமிழ்மண்ணையே சின்னுபின்னப்படுத்திவிட்டிருக்கிறது. புயலும் மழையும் பொல்லாத வெள்ளமும் சொல்லொணுத் துயரத்தைத் தந்துவிட்டன தமிழகத்துக்கு! தாயைப் பிரிந்து தவிக்கும் சேய், சேயை இழந்து கதறும் தாய், மாடு மனையைப் பலிகொடுத்து மகேஸ்வரனை வேண்டி நிற்கும் ஏழையர் பட்டாளம்—இவர்கள் அத்தனைபேருடைய துயரகீதங்களையும் இயற்கை தன்னுடைய வெறியாட்டத்திற்குப் பக்கமேளமாக்கிக்கொண்டு ஓயாத பேய்க் கூத்து ஆடியிருக்கிறது. குட்டுப்பட்ட தமிழகத்திற்கு மேலும் ஒரு குட்டு! காலுக்கடியிலே கிடந்து துவைந்து சாகும் தென்னுட்டிற்கு அடிமேல் அடி! அடுக்கடுக்காகத் துன்பச் சுமை! தமிழ்நாடு தாங்குமா? பழைய நிலை பெற்றுவிடுமா? என்ற அச்சம் எல்லோர் உள்ளங்களிலும் படமெடுத்து ஆடத் தொடங்கிவிட்டது. வாழ் வைச் சுவைக்கும் பணமுதலைகளைத் தன்னகத்தே பெற்றிருக்கும் வடநாடுகூட வெள்ளம் புகுந்த காலங்களில் தத்தளித்தது என்றால் தரித்திரத்தின் அரவணைப்பிலே சிக்கித் தவிக்கும் தமிழகம் என்னுகுமென்று நினைக்கும்போது நெஞ்சத்தைத் திகில் கவ்வு கிறது. தமிழகத்தாரோடு போர் தொடுத்த எதிரிகள் கூட தமிழ் நாட்டைப் பிணக்காடாக்கி மகிழ்ந்ததில்லை, புயலும் மழையும் அவ் வளவு உயிர்களை அடித்துக்கொண்டு போய்விட்டன.

"காமராசர் பறந்தார்; பார்வையிட்டார்; உதவிசெய்யாமல் திரும்பமாட்டேன் என உறுதி தந்தார்; விமானத்திலிருந்து கொண்டே உணவுப்பொருள்களைத் தெளித்தார்" என்ற செய்தி களைப் பத்திரிகைகளிலே பார்த்தோம். கடமையை, தேவைப் படும் காலத்தில் ஆற்றுகிறார் என்று நாமெல்லாம் மகிழ்ந்தாலும் நம்மால் திருப்திப்பட முடியவில்லை. சென்னையின் சக்திக்கும், தன் உள்ளத்திற்கும் ஏற்ற அளவில் காமராசர் செலவு செய்வார் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

சென்ற புயலிலே சக்திக்கு மீறிய உதவியைச் செய்து பெருமை எய்திய தி. மு. கழகம் இந்த முறையும் உடனடியாக புயல் நிவாரணத்திற்கென ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது. பெரியார் இராமசாமி அவர்களும் ஆயிரம் ரூபாய் தந்துள்ளார்கள். இவை யெல்லாம் நமக்கு சிறிதளவு ஆறுதலைத் தருகின்றன. கோடிக் கணக்கில் நட்டப்பட்டு, கொடுமைகளுக்கிலக்காகிப் புழுவாகத் துடிக்கும் தென்மாவட்ட மக்களுக்கு இந்த உதவிகள் எந்த மூலைக் குப் போதும்? பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் படங் களே நமது கண்களை அருவியாக்கி விடுகின்றன என்கிறபோது; நேரடித் தோற்றம் எவ்வளவு கோரமானதாக இருக்கும்? அவை களுக்கெல்லாம் இந்தச் சிறு உதவிகளால் எந்தவிதப் பயனும் ஏற் பட்டுவிடாதுதான். ஆனால் இந்த உதவிகளெல்லாம் சர்க்காருக்கு ஊக்கமூட்டுபவையாக அமையட்டும். ஆனால் சென்னை சர்க்கார் எவ்வளவுதான் தன் நிலைக்கு மேற்கொண்டு உதவி செய்தாலும் அந்த உதவி ஒரு மாவட்டத்தின் சேதங்களைச் சரிப்படுத்துவதற்கே நிச்சயமாகப் போதாது. **மாநிலங்களைக் கட்டியாளும் இந்தியப் பேரரசு தமிழகத்துச் சேதத்திற்கு நிவாரணமளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாதவரையில் சீர்குலைந்த மாவட்டங்களை எந்த வகையாலும் செம்மைப்படுத்த இயலாது.** வெறும் அனுதாபம் பயனில்லை! பய னில்லை! பயனில்லை! 'அஸ்ஸாமிலே வெள்ளம்!'—தமிழர்கள் இயன்றதைச் செய்தார்கள். தென்னுட்டு முதலாளிகள் பணம் அனுப்பி உதவினார்கள். அதிகார ரீதியிலே கூட தென்னுட்டிலே பணம் திரட்டப்பட்டது. ஆனால் இப்போது? தந்துதவியவர்கள் உள்ளமெல்லாம் வெந்து பூவாகும் வகையிலே புயல்! அது விளை வித்த கோரம்! வடநாட்டு பெரிய சர்க்கார் என்ன செய்யப் போகிறது? நாடு சிங்காரமாக இருக்கும்போது பவனிவந்து போகும் பண்டிதர், நாடு பிணக்காடாகிக் கிடக்கின்ற இந்த நாட் களில் நேரிலே வந்து பார்த்துப் போகட்டும்; டில்லிக்கு வரிப் பணத்தை அள்ளிக் கொடுக்கும் தென்னுட்டிற்கு அதில் ஒரு பகுதியை இந்த நேரத்தில் தந்துதவட்டும். டில்லியின் உதவி—கெட்டி மச்சு வீடுகளிலே வாழ்ந்தோர் குட்டிச்சுவர்களிலே உலை வைத்துக் காய்ச்சிக் குடிக்கப்போகும் பரிதாப நிலையை மாற்றிட உதவட்டும்!

டில்லியின் உதவி—ஆடு மாடுகளை இழந்து, காடு கழனிகளை வெள்ளத்திற்கு உணவாக்கிவிட்டு கன்னத்திலே கைவைத்து நிற்கும் உலகத்தை இயக்கும் உழவர் பெருமக்களுக்கும் உயிரூட்டு வனவாக அமையட்டும்!

டில்லியின் உதவி—நன்றியுள்ள தமிழகத்தின் இதயத்தை எப்போதாவது உணரக்கூடிய வகையில் அமைய, குறைந்தது மூன்றுகோடி ரூபாயாகவாவது இருக்கட்டும்.

காமராசர் நெஞ்சு, தமிழ் நெஞ்சு. அவர் துன்பத்தின் குணமறிந் தவர்; தேவைகளின் தொல்லைகளை உணர்ந்தவர். அயர்ந்துவிட மாட்டார். டில்லியைத் தட்டிக் கேட்பார். மிஞ்சினால் அதட்டவும் செய்வார். தமிழகத்து எதிர்க்கட்சிகள் இப்போது துணை நிற்கும். தி. மு. கழகம் முன்னதாகவே ஒத்துழைக்கக் கோரி, தன்னுடைய கரத்தை நீட்டிவிட்டது. துயர் துடைப்பது இன்றைய தமிழ் மகன் ஒவ்வொருவரின் கடமையாகும்.

ஈ. வி. கே. சம்பத்
வடநாடு சுற்றுப்பயணம்

அன்புள்ள தோழர்களே!

டில்லி நகரில் நடைபெறும் சர்வ தேசத் தொழிற் கண் காட்சியைக் காணவும், வட நாட்டில் ஏற்பட்டுள்ள நீர்ப் பாசன, தொழில் அபிவிருத்தி களைக் கண்டறியவும், எனது துணைவியாருடன் காரில் புறப் பட்டுச் செல்லுகின்றேன். திரும்ப, ஒரு மாத கால மாகலாம் என எண்ணுகின் றேன். எனவே, அதுவரை நிகழ்ச்சிகளுக்கு ஒத்துக் கொள்ளுமாறு பணித்துக் கடிதங்கள் எழுதாமல் இருக் குமாறு பணிவன்புடன்வேண் டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள
ஈ. வே. கி. சம்பத்
ஈரோடு



இலங்கைக் காட்சிகள்

யார் காரணம் ?

தினம் தினம் தினப் பத்திரிகைகளைப் புரட்டினால் சிங்களமொழி வெறியர்களின் கோர தாண்டவத்தைத்தான் செய்திகள் என்ற தலைப்பில் காணமுடிகிறது. சிங்களத் தலைவர்கள் எனப்படுவோர் பொறுப்புணர்ச்சி அற்றவர்களாக கண்டபடியெல்லாம் பேசி சிங்களப் பொதுமக்களுக்கு மொழிப் போதையை யூட்டி வருகிறார்கள். 'பறைஜாதித் தமிழர்' என்று தமிழ்மக்களை தூஷிப்பதும், பலாத்காரத்தினால் தமிழ்மக்களை அடக்குவோம் என்று கர்ஜிப்பதும் சர்வ சாதாரணமாகிவிட்டது.

இந்த மனோநிலையும் துணிவும் சிங்களத் தலைவர்களுக்கு எப்படி ஏற்பட்டது? இப்படியான ஒரு நிலை இலங்கையில் உருவாகக் காரணஸ்தர்கள் யார்? தங்கள் கடமையை உணராத தமிழ் பேசும் மக்களும், அவர்கள் தேர்ந்தனுப்பிய தமிழ்ப் பிரதிநிதிகளுமே இத்துரதிர்ஷ்டமான நிலைக்குக் காரணஸ்தர்கள் என்று நாம் அறுதியிட்டுக் கூறுவோம்

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்ததாம் ஒரு நாய். இப்படி ஒரு பழமொழி உண்டு. ஆட்டைக் கடிக்கும்போதே நாயின் வாய்க்கும் வார் போட்டிருந்தால் அது மாட்டையும், மனிதனையும் கடிக்க முற்பட்டிருக்குமா? தமிழ்மக்களின் நல உரிமைகளையும் தமிழ் மொழியையும் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு தமிழ் பேசும் மக்கள் கடந்த பொதுத் தேர்தல்களில் பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்பினார்கள். பிரதிநிதிகளோ சுயநலமிகளாகி அற்பப் பதவிகளுக்காகவும், சலுகைகளுக்காகவும் தங்கள் கடமையை மறந்தார்கள். இந்தத் தமிழ்ப் பிரதிநிதிகளின் உதவியையும், ஒத்தாசையையும் விலைகொடுத்து வாங்கிக் கொண்டு, சிங்களத் தலைவர்கள் தமிழ் பேசும் மக்களை அரசியல் படுகொலை செய்வதான பிரஜா உரிமை, வாக்குரிமைச் சட்டங்களை நிறைவேற்றினார்கள். சிங்களக் கொடியைத் திணித்தார்கள். தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிடப் பட்ட சிங்களக் குடியேற்றங்களை வெற்றிகரமாக நடத்தினார்கள். பிரிட்டிஷ் அரசியின் முன்பு 'அக்ஸிடன்ரலாக' தமிழைப் புறக்கணித்தார்கள்.

இப்படியாக இவர்கள் ஆட்டையும் மாட்டையும் கடித்து வந்த போது, தமிழ்ப் பிரதிநிதிகளும் தமிழ் பேசும் மக்களும் ஒருமுகமாக எதிர்த்து நின்று, கடிவாய்க்கு வார் பூட்டியிருந்தால் நாய் ஈற்றில் மனிதனைக் கடித்ததுபோல், இன்று அவர்கள் தமிழ்மொழியை ஒழித்துக்கட்டும் கடைசிக் கட்டத்திற்கு வந்திருக்கமாட்டார்கள். அதற்கான துணிவும், நெஞ்சழுத்தமும் அவர்களிடம் ஏற்பட்டிரா. சிங்கள வகுப்புவாத அரசாங்கம் தமிழ் இனத்தின் உயர்நிலையை நோக்கித் தொடுத்த முதற்கணை மலைநாட்டுத் தமிழ் மக்களை வாக்குரிமை, பிரஜா உரிமை அற்றவர்களாக்கி தமிழ் இனத்தின் பாதிப்பலத்தை, வலது கரத்தை, வெட்டிக் குறைத்ததாகும். அப்போதே பாராளுமன்றத்திலிருந்த தமிழ்ப் பிரதிநிதிகள் கையுயர்த்தி ஒப்புதல் கொடுக்காதிருந்தால் சிங்கள அரசியல் வாதிகள் தங்கள் கபடத்திட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றும் துணிவைப் பெற்றிருக்கவே மாட்டார்கள். தவறான காரியத்தைச் செய்தால் தமிழர்கள் கொதித்தெழுவார்கள் என்ற பயம் அவர்கள் மனதில் பதிந்திருக்கும்.

ஆனால், இன்றோ, "நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். தமிழ்மக்கள் தாமாகப் பணிந்து தண்டனிடுவார்கள். முதலில் சற்றுக் குலைப்பார்கள், கூத்தாடுவார்கள். பின்பு வாலைச் சுருட்டிக்கொண்டு பாதங்களை நக்குவார்கள்" என்ற எண்ணம் சிங்கள அரசியல் வாதிகளிடையே ஏற்பட்டிருக்கிறது. பல சிங்களத் தலைவர்கள் இந்தக் கருத்தை மேடைகளிலும், பத்திரிகைகளிலும் வெளியிட்டிருக்கிறார்கள். திரிசிங்கள முன்னணித் தலைவர்களில் ஒருவர் கடந்த வாரம் தமிழ்மக்களின் மகத்தான, தலைவர்' திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பெயரையே பகிரங்கமாகக் குறிப்பிட்டு, இந்த உண்மையை அம்பலமாக்கியிருக்கிறார்.

தமிழ்ப் பிரதிநிதிகள் - உரிய காலத்தில் தங்கள் எதிர்ப்பைக் காட்டியிருந்தால், அல்லது அப்படி எதிர்த்து நிற்காத இனத்துரோகிகளைத் தமிழ் பேசும் மக்கள் அடுத்து வந்த பொதுத் தேர்தலில் மண் கவ்வச் செய்திருந்தால், இன்றைய பரிதாபகரமான நிலை தமிழுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் ஏற்பட்டிராது.

வெந்த வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்று ஒருசில தமிழ்ப் பிரதிநிதிகள் நடந்துகொண்டார்கள். தமிழ் பேசும் மக்கள், சுரணையற்றவர்களாக, இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன, கூடவந்த குரங்கு ஆண்டாலென்ன என்று அலட்சியமாக தங்கள் பொன்னான வாக்குகளை மண்ணாக்கினார்கள். இன்று அனுபவிக்கப் போகிறார்கள்.

இப்படியான இன்னல்கள் தமிழ் இனத்தையும், தமிழ் மொழியையும் சூழப்போகின்றனவென்று சுமார் ஆறு ஆண்டுகளுக்குமுன் தீர்க்க தரிசனத்தோடு கூறிய பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், சுதந்திரனையுமே சாரும். அன்றுமுதல் இன்றுவரை கொள்கையைக் கைவிடாமல், நேர்மையையும், வாய்மையையும் கேடயங்களாகத் தாங்கி, நிமிர்ந்து நின்று, சிங்கள வகுப்புவாதிகளின் ஆக்கிரமிப்பையும், சூழ்ச்சித் திட்டங்களையும் எதிர்த்துப் போராடி வருபவர்கள் தமிழரசுக் கட்சியார்தான். மண்குதிரைகளை நம்பிய தமிழினம் நட்டாற்றில் கைவிடப் பட்டபோது சமஷ்டி அரசியல் என்ற இலட்சியத் தோணியைச் செலுத்தி அதில் ஏறிக்கொள்ளுங்கள் என்று தத்தளித்த தமிழ் மக்களுக்கு ஜீவதானம் அளித்தவர்கள் தமிழரசுக் கட்சியார்தான். இன்றைக்குமுன் பல்வேறு அபிப்பிராயம் கொண்டவர்களாயிருந்தவர்களும், "தமிழரசுக் கட்சியார் சொன்னதுதான் சரி, இலங்கைக்கு ஏற்றது சமஷ்டி அரசியல்தான்" என்று இன்று முடிவு கட்டுகிறார்கள்.

தமிழினத்தின் இன்றைய அவல நிலைக்கு, நமது மதிப்புக்குரிய சகோதரர்களான சிங்களப் பொது மக்கள் காரணஸ்தர்கள் அல்ல என்பதையும், "உடன்பிறந்தே கொல்லும் வியாதி" என்பதுபோல் நமது ஒத்துழைப்புப் பிரதிநிதிகள் தான் காரணஸ்தர்கள் என்பதையும் தமிழ்பேசும் மக்கள் நாளுக்கு நாள் உணர்ந்து வருகிறார்கள்

"சுதந்திரன்"

இலங்கையில் புகைப்படம் எடுத்துதவிய "மாறன்"

இலங்கையில்..

வின்ஸற் மகளிர் கல்லூரியில்

வின்ஸற் மகளிர் உயர்தரக் கல்லூரியில் திருமதி டி. இராமச்சந்திரா தலைமையில் கண்ணதாசன் 'சங்ககாலத் தமிழ்ப்பெண்கள்' என்னும் பொருள் பற்றிப் பேசினார்.

மத்திய கல்லூரியில் கண்ணதாசன்

மத்திய கல்லூரியின் தமிழ்ப் பேரவையின் சார்பில் திரு. கே. சின்னத்தம்பிஅவர்கள் தலைமையில் கண்ணதாசன் சிறந்ததோர் இலக்கியச் சொற் பெருக்காற்றினார். கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடை கொடுத்து மாணவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்தார்.

அரசினர் கல்லூரியில்

மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் அதிபர் திரு. கந்தையா அவர்கள் தலைமையில் கண்ணதாசன் பொருள் பொதிந்ததோர் சொற் பெருக்காற்றினார்.

ஏறுவூரில் கண்ணதாசன்

ஏறுவூர் போலீஸ் மைதானத்திலிருந்து மேளவாத்தியங்களோடு கண்ணதாசன் ராஜா பட மாளிகை வரை அழைத்துச் செல்லப்பட்டார். வீதி இருமருங்கிலும் விளக்கேற்றி-மாலையிட்டு மதிப்பளித்தார்கள்.

ஏறுவூர் அரசினர் கல்லூரி அதிபர் திரு. கே. தம்பிராசா தலைமையில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் கண்ணதாசன் சுமார் இரண்டு மணி நேரம் தமிழகத்தின் மாண்பு-தமிழ்மொழியின் சிறப்பு-தமிழ்மக்களின் பெருமை பற்றி அழகானதோர் சொற் பெருக்காற்றினார்.

பதுளை திருக்குறள் மன்றத்தில்

பதுளை திருக்குறள் மன்றத்தின் சார்பில் சரஸ்வதிவித்தியாலயத்தில் பண்டிதர் எஸ். தம்பியப்பா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 'கவிஞன் கண்ணோட்டம்' என்ற பொருள் பற்றிப் பேசினார்.



ராசதுரையும் ஆசிரியரும்

ஆசிரியத் தோழருக்கு..

தரணி புகழ் இலக்கியங்கள் தமிழுக்கே சொந்தம் !

கடந்த சில தினங்களுக்குமுன்பு திருச்சி அர்ச்சூசையப்பர் கல்லூரியில் கல்லூரிநாள் **(College Day)** கொண்டாடப்பட்டதாகவும் அதில் சென்னை மாநில கல்வியமைச்சர் தமிழில் சொற்பொழிவாற்றியதாகவும் அதைக் கண்டு அக்கல்லூரி மலையாள மாணவர்கள் கூட்டத்தினின்று வெளியேறியதாகவும் செய்தித்தாள்களின்மூலம் அறிந்தேன். இதைக்கண்டு எந்த திராவிடனும் வெட்கப்படுவதன்றி வேறொன்றும் செய்வதற்கில்லை. தமிழ்மொழி அரசியல் மொழியாக வேண்டும், கல்லூரியில் போதனு மொழியாக வேண்டும் என்று தமிழ்நாட்டில் வாழும் அத்தனை மக்களும் கட்சி இன பேதமின்றி விழைந்துவரும் இந்நாளில் திருச்சியில், சோழமன்னரது தலைநகரில் கால்டுவெல், போப் போன்ற மேலை நாட்டுக்கிறித்துவநல்லறிஞர்களால் ஆராயப்பட்டு பழமையும், பெருமையுமுடையது தமிழ்மொழியென்று, இலக்கியம் செய்துச் சென்ற அத்தகையவர் வழிவந்த கிறித்துவர்களால் நடத்தப்படும் சூசையப்பர் கல்லூரியில் தமிழ்ப் பேசுவதற்கு இடமில்லையென்று எண்ணினுர்கள் போலும், அந்த மலையாள மாணவர்கள்.

நாட்கள் பலஇல்லை தமிழ் போதனு மொழியாவதற்கு, நாட்கள் நெருங்கிக்கொண்டே வருகின்றன. தமிழ்நாட்டிலிருக்கும் பல கல்லூரிகளில் இத்தகைய கூட்டங்கள் பலவற்றைத் தமிழிலே நடத்திவருகிருர்கள் என்பதை அவர்கள் அறியார்கள் போலும். அண்மையில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவிலே அமைச்சர் சுப்பிரமணியம் தமிழிலே பேசினுர் என்பதை அவர்கள் அறியார்கள் போலும். பட்டமளிப்பு விழாவை விட இது அவ்வளவு சிறந்த விழாவோ, இதில் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டுமென்ற அவசியம் யாதாகிலும் உளதோ என்று யான் ஐயுற வேண்டியவனுக இருக்கின்றேன். இதுவரை இத்தகைய கூட்டங்களில் ஆங்கிலத்தில்தான் சொற்பொழிவாற்றுவது வழக்கமென்று வேண்டுமானுல் அவர்கள் சமாதானம் கூறிக்கொள்ளலாம். அதற்குரிய பதிலை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வள்ளுவர் "உலகத்தோடொட்ட ஒழுகல் பல கற்றும் கல்லான் அறிவிலாதான்"-என்று கூறியுள்ளார்.

இந்நாட்களில் தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலரும் எக்கூட்டங்களிலும் தமிழிலே பேசுவதென்று உறுதிசெய்து வருகிருர்கள் என்பதை அவர்களுக்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன். இனி தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் இத்தகைய கூட்டங்கள் தமிழிலேதான் நடத்த வேண்டுமென்று விதிவகுக்கும் நாட்கள் விரைந்து வருகின்றன என்பதையும் அவர்களுக்குக் கூற விரும்புகின்றேன். இத்தகைய தமிழ்ப் பேச்சைக் கேட்க விரும்பாத மலையாளிகள் ஏன் தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் படையெடுக்கவேண்டுமென்று கேட்கின்றேன்? இவர்களால் எத்தனை தமிழ் மாணவர்களுக்கு அக்கல்லூரியில் இடமில்லாது போயிற்ருே! யானறியேன்!

அவர்கள் வெளியேற்றம் செய்ததால் தமிழ்மொழிக்கு இழுக்கு உண்டாக்கினதாக எண்ணிவிட வேண்டாம். இதனுல் தமிழ் மொழியின் வளமையும் பெருமையும் எந்நாளும் குறைவு படாது. அவ்வெளியேற்றத்தினுல் தமிழ் மொழியின் கீழ்நிலையையும், அவர்கள் மொழியின் உயர்நிலையையும் அவர்கள் காண்பித்ததாக என்றும் எண்ணவேண்டாம். இதற்கு மொழி நூல் படி சில ஆதாரங்கள் ஈண்டு தருகின்றேன்.

தமிழ்மொழியில் இலக்கியங்கள் பல்லாயிரமாண்டுகட்கு முன்னரே தோன்றிவிட்டன. மலையாளமொழி கொடுந்தமிழ் என்ற திருந்தாத மலைவாழ் மக்களால் பேசப்பட்டு வந்த தமிழாகிய தாய்மொழியினின்று பிரிந்து தோன்றியதாகும். இம்மொழியில் தோன்றிய முதலிலக்கியம் 13-ம் நூற்ருண்டில் தோன்றிய "இராமசரித"மாகும். இதுதமிழும் வடமொழியும் கலந்த ஒரு கலப்பு மொழியால் இயற்றப்பட்டதாகும். பின்னர் இராமாநுஜ எழுத்தச்சர் என்பவர் வடமொழியும் மலையாளமும் கலந்த மணிப்பிரவாளம் என்ற ஒரு புது நடையைத் தோற்றுவித்தார். அதன் பின்னரே மலையாளத்தில் இலக்கியங்கள் தோன்றின.

மேலும் இவர்கள் திசைச்சொல்லைக் குறிக்கும் "மேற்கு" என்ற சொல்லுக்கு "படிஞாறு" என்று கூறுகின்றனர்: படி-ஞாறு என்ற இரண்டும்தமிழ்ச்சொற்களே. இதற்குப் பொருள் கதிரவன் மறைவது, அதாவது அத்திசையாகிய மேற்கு என்பதாகும். இவர்கள் திசை போன்ற சாதாரண சொற்களுக்கே இன்னும் தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். மற்றும் தமிழர்கள் கதிரவன் மறையும் திசையை மேற்கு என்று கூறுவதற்குச் சிறந்த பொருளுண்டு. தமிழ்நாடு இயற்கையமைப்பில் மேற்பகுதி உயர்ந்தும், கிழக்குப் பகுதி தாழ்ந்தும் இருக்கிறது. "மே"என்ற சொற்கு மேல் அல்லது உயரம் என்று பொருள். மேற்கு என்ற சொல்லின் அடிச்சொல் "மே" என்பதாகும். கதிரவன் மறையும்திசை தமிழகத்தின் உயர்ந்த பக்கமாகும். அதனுல் அத்திசையை மேற்கு என்று தமிழர் அழைத்தனர்.

மலையாளநாடு, கதிரவன் மறையும் திசை தாழ்ந்தும், கதிரவன் தோன்றும்திசை உயர்ந்தும் இருக்கிறது. ஆதலால் அவர்கள் கதிரவன மறையும் திசையை "படிஞாறு" அதாவது மேற்கு என்று கூறுவது அறிவுக்குப் பொருந்து மாறில்லை. இத்துடன் மொழியாராய்ச்சியைப் பற்றி நிறுத்துகின்றேன்.

இனியாகிலும் மலையாள மாணவர்கள் தங்கள் மொழி, தமிழ் மொழியாகிய தாய்மொழியினின்று பிரிந்தது என்பதை உணர்ந்து இத்தகைய தமிழ்க்கூட்டங்களில் தாய்க்களிக்கும் மதிப்பையளித்து தமிழ்மொழிக்கும், மலையாள மொழிக்கும் பெருமை தேடிக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

குடந்தைக் கோவேந்தன்.

★

பேரன்புடையீர்! 8-10-55 ம் தேதிய தென்றல் இதழைக்கண்ணுற்றேன். கடந்த இதழ்களைப் போனறே இவ்விதழும் நானுவித நற்கருத்துக்களைத் தன்னகத்தே தாங்கி வந்துள்ளது. அகமகிழ்ச்சி.

இன்று தமிழ் கூறுநல்லுலகில் தங்கள் தென்றல் தக்கோர் பலரால் போற்றப் பெறுவது மட்டுமின்றி என்னையும் வெகுவாகக் கவர்ந்துள்ள தென்பதை உவப்போடு உரைக்கின்றேன்

ஆனுல்-இவ்வார இதழில் நந்தமிழ் நிலத்தின் தனிப் பெருங் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தெரிவித்ததாக வெளியிட்டுள்ள "இராமன் கடவுளா? என்ற சிறு கட்டுரை ஒன்றைக் கண்டு சற்று கலக்கினேன். ஏன், வருந்தவும் செய்தேன். நான் வருந்த ஏதுயாதெனில் அக்கட்டுரை பிழைபட அமைந்திருந்ததே!-அதுவருமாறு.

மெய்கண்ட நூல்கள் பதினுன்கனுள் அருணந்தி சிவாச்சாரியார் யாத்த சிவஞான சித்தி என்னும் சைவ சித்தாந்தச் சுவடியில் பரபக்கப் பாடலொன்றை ('மாயமான் தன்னை) எடுத்துக் காட்டி, அது சௌத்திராந்திக (சௌத்திராந்திகமன்று) மதத்தைச் சார்ந்த வைணவரை மறுத்தார் அருணந்தி சிவம் என பொருள் படமிளிர்கின்றது. சௌத்திராந்திக மென்பது வைணவ சமயத்தின் மாற்றுப் பெயரோ அல்லது அதன் உட்பிரிவோ அல்ல சௌத்திராந்திகம் புத்த சமயத்தின் பிரிவுகளில் ஒன்ருகும். புத்த சமயம்-சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்தியமிகம, வைபாடிகம் என நான்கு பிரிவுகளை உடைத்தாயிருக்கிறது. வடபுலத்தில் 'பெருவழி" (மகாயானம்) 'சிறுவழி" (ஈனயானம்) என்று இரு பிரிவுகள் உள்ளன. அவற்றில் ஈனயானமே தென்னுட்டிற் பரவிய தெனலாம். பெருவழி என்பதிலே சாந்தேய மதக் கொள்கைகளும் வழக்கங்களும் கலந்துள்ளன. ஆகவே சௌத்திராந்திகம் புத்த மதப் பிரிவுகளுள் ஒன்று.

தாங்கள் வெளியிட்டுள்ள 'மாயமான் தன்னை" எனும் செய்யுள் பாஞ்சராத்திரிகளான வைணவரை மறுக்கும் பகுதி. சௌத்திராந்திகளை மறுப்பதன்று. பாஞ்சராத்திரம் வைணவ சமயத்தின் பிரிவு. மறைத்திரு மறைமலையடிகளாரின் ஆசிரியரும் சைவ சண்டமாருதப் பேச்சாளருமான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கள் தீட்டிய "சித்தாந்த ரத்னுகரம்" என்ற நூலுள் பாஞ்சராத்திரத்தைப் பற்றி பரக்கக் காணலாம்.

எதன் பொருட்டு இதை எழுதுகிறேன் என்ருல் நாம் மிகவும் விழிப்போடு இருப்பவர்கள், ஆராய்பவர்கள், ஆதலால் நம்மிடம் கூடுமானவரை இந்தக் குறைபாடுகள் மலியக் கூடாதென்பதே என் தாழ்மையான வேண்டுகோள்.

நேர்ந்த சிறு பிழை கவிஞரவர்களின் கவனக் குறைவென்றே கருதுகிறேன. மற்ற சாதாரணமானவர்கள் புகன்றதாயிருந்தால் சங்கடமில்லை, நான் வருந்த வேண்டிய நிலையுமிராது.

நீல. துரைக்கண்ணன் சென்னை.

[இந்தக் கடிதம் வந்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகியும், இது குறித்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களிடம் கேட்பதற்காக இதுவரை பிரசுரம் செய்யாமலிருந்தோம். புரட்சிக் கவிஞர் அவர்களைக் கேட்டதில் நண்பர் நீல. துரைக்கண்ணன் எழுதியுள்ளது சரிதான் என்றும் தாம் கவனக் குறைவால் அவ்வாறு கூறிவிட்டதாகவும் தெரிவித்தார்கள். எனவே, நண்பர்கள் தவறைத் திருத்தி வாசிக்கவேண்டுகிறோம். தவறை எடுத்துக் காட்டிய நண்பர்க்கு நம் நன்றி. (ஆ-ர்)]

★ ★★ ★

கடன் கொடுத்த நெஞ்சம்!

திருவிழா ஒன்றில் ரங்கராட்டினம் சுழன்று கொண்டிருந்தது. அதை ஒருவர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். சோகமே வடிவெடுத்த ஒருவன் ராட்டினத்தில் ஒரு மரக்குதிரையைத் தொற்றிக்கொண்டிருப்பதை அவர் கவனித்தார். ஓர் ஆட்டம் முடிந்து எல்லாரும் இறங்கினுர்கள். ஆனுல் அவன் இறங்கவில்லை. இரண்டாவது ஆட்டத்தின் முடிவிலும் அவன் இறங்கவில்லை. அவன் ஆட்டத்தை ரசித்ததாகவும் தெரியவில்லை. வேடிக்கை பார்த்தவர் வியப்புடன் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார். இப்படியே இருபது நிமிஷம் கழிந்தது. கடைசியில், தம் ஆவலை அடக்க முடியாமல் அவர் ராட்டினத்தின் அருகே சென்ருர். "நான் இதைக் கேட்பதற்குப் பொருத்துக்கொள்ளும். நீர் உண்மையிலேயே இந்தச் சவாரியை ரசிக்கிறீரா?" என்ருர்.

குதிரையில் இருந்தவன். 'இல்லை' என்னும் பாவனையில் பலமாகத் தலையைஆட்டினுன்.

"பின் ஏனையா இப்படிச் சவாரி செய்கிறீர்?"

"ஏனு? இந்த ராட்டினத்தின் சொந்தக்காரன்எனக்குஐந்து டாலர் தரவேண்டும். வேறு எப்படியும் அவனிடமிருந்து அதை வசூலிக்க முடியவில்லை, ஆகவே, இப்படி வசூல் செய்கிறேன்"

இது ஹாஸ்யத் துணுக்குத்தான். ஆனுல் இந்த மாதிரி உணர்ச்சி நமக்கு இல்லையா என்ன?

'நமது பணத்தின் முழுப் பயனையும் அடைந்துவிட வேண்டும்; சற்றும் ஏமாறக் கூடாது' என்ற ஆவலில், நம்மை நாமே வருத்திக்கொள்வோம்; கொடுத்த பணத்தைப் 'போனுல் போகிறது' என்று ரத்து செய்ய மாட்டோம்.

— 'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' 'மஞ்சரி'யிலிருந்து,

★ ★★ ★

★ டில்லி சென்ற திருமூர்த்திகள்! ★

எஸ். எஸ். தென்னரசு

சரியாகவோ, தவறாகவோ ஆளுகிற சந்தர்ப்பத்தைப் பெற்றுவிட்டதால்தான், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியவில்லை—தெரிந்து கொள்வதற்கு மார்க்கமில்லையென்றால், ஆளும் உரிமையைத் தந்த மக்களையுமல்லவா அவமதிக்கத் தொடங்கி விட்டார்கள் இந்தத் 'திருமூர்த்திகள்'. ஏதோ புதிர்போடுவதாக நினைத்துவிடாதீர் ரஷ்யநாட்டின் இருபெருந் தலைவர்களின் சென்னைவருகையிலேயே திளைத்து மகிழ்ந்திருந்த எனக்கு டில்லியிலே நடைபெற்ற ஒரு சம்பவம் பெருத்த கவலையை உண்டு பண்ணிவிட்டது. எத்தனை முறை புல்கானிங்கும், குருஷேவும் வந்து போனாலும் இந்த நாட்டு காங்கிரஸ் முன்னோடிகளின் இழிகுணம் போகாது என்றுதான் நாம் நினைக்கிறோம். இது நமது சொந்தக் கருத்து. வந்திருந்த தலைவர்கள் இன்னும் தாயகம் போய்ச் சேரவில்லை; அதற்குள்ளாகவே காங்கிரஸ் பிரமுகர்கள் அவர்களது வளர்ப்புக் குணத்தைக் காட்டியிருக்கிறார்கள். தங்களுடைய வருகை குறித்து இந்தியப் பத்திரிகைகள் என்ன எழுதியிருக்கின்றன என்று ரஷ்யத் தலைவர்கள் பத்திரிகைகளைப் புரட்டும்போது இந்த சோகச் செய்தியும் அவர்களது கண்களுக்குப் படத்தான் செய்யும். கடந்தகால முடியரசு தர்பாரை நேருக்கு நேராகக் கண்டிக்கும் தூய உள்ளம் கொண்டோரின் 'இரு ஜதை'க் கண்களுக்கு, கண்ணுக்கு முன்னாலே ஜனநாயகம் பழிக்கப்படும் செய்தி அவர்களுக்கு எப்படிப் படாமலிருக்க முடியும்? இந்தியத் துணைக்கண்டத்தை பெரிதாக நினைத்திருந்தவர்கள் இங்கு வந்து பார்த்த பிறகு, நேருப் பண்டிதர் தன்னுடைய பலமின்மையை மறைக்கத்தான் 'அகிம்சைப் புறாக்களை'ப் பறக்கவிடுகிறாரோ என்று அவர்கள் நினைத்திருந்தாலும் அது ஆச்சரியப்படுவதற்கில்லை.

பலம்பொருந்திய ஒரு வல்லரசு நாட்டின் தலைவர்களிடம், அவர்கள் பார்த்து வியந்தையுறத்தக்க சாதனைகள் நம்மிடம் இருந்தால்தான் அவைகளை நாம் அவர்களிடம் காட்டி மகிழவேண்டும்.

இங்கே அப்படி நடக்கவில்லை. தென்னங்கீற்றுக்களையும், வாழை மரங்களையும் இணைத்துக் கட்டி வரவேற்பு வளைவுகளாக வைத்திருந்ததைப் பார்த்தும், ரஷ்யத் தலைவர்கள் அவை உண்மையாகவே ஒரே ஆணிவேரிலிருந்து கிளைவிடும்படி இங்கே விஞ்ஞானம் வளர்ந்திருப்பதாக எண்ணியும் கூட ஆச்சரியப்படவில்லை. 'இது பிரமாதமல்ல, எங்கள் நாட்டில், ஒரே செடியில் வேரில் உருளைக்கிழங்கும் செடியில் தக்காளியும் காய்க்கிறது'' என்று சொன்னார்கள். அத்தகைய விஞ்ஞான விற்பன்னர்களிடம் இந்தியத் துணைக்கண்டம் தனது பலவீனத்தைக் காட்டிக்கொண்டு விட்டது என்றுதான் சொல்லவேண்டும். ''இந்தியத் துணைக்கண்டத்தின் ஜனத்தொகைக்காக நேருப் பண்டிதருக்கு ரஷ்யாவிலே வரவேற்பு நடத்தினார்கள்: ஆனால் நாம் ரஷ்யநாட்டுத் தலைவர்களின் தொண்டுக்காக, புனிதமான கொள்கைகளுக்காக வரவேற்பு நடத்தினோம்.''—என்று நினைத்து இப்போது பூரணமாக மகிழ முடியவில்லை. உண்மையிலேயே ரஷ்யத் தலைவர்களுக்கு தென்னாடு காட்டிய மரியாதை அவர்களின் தொண்டுக்காகத்தான்—ஆனால் நேருவுக்கு ரஷ்யா அளித்த வரவேற்பு எதற்காக? பண்டிதரே ஒப்புக்கொண்டிருக்கிறார் இந்தியாவின் மக்களை வைத்துத்தான் தனக்கு வரவேற்பு என்று. தொண்டாலும் கொள்கையாலும் உலகைக் கவர்ந்த தலைவர்கள் வந்துபோன மறுவாரத்திலேயே டில்லியிலே ஒரு சோக நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அதைச் சொல்வதற்குத்தான் இவ்வளவு நீண்ட பீடிகையைப் போட்டிருக்கிறோம். பண்டித நேருவே அதற்காகப் பெரிதும் வருந்தியிருக்கிறார்.

குறிப்பிட்ட தேதிக்குள் மாநிலப் புனரமைப்புக் குழு அறிக்கைமீது அரசாங்கங்களிடமிருந்து கருத்துப் பெற அதிகாரம் அளிப்பது சம்பந்தமாக அரசியல் சட்ட மசோதா பற்றிய பிரேரணை நவம்பர்30ம் தேதி மக்கள் சபையிலே தோற்றுப்போய் விட்டது. இதுவரை சர்க்கார் சார்பில் இதுபோன்ற தோல்வி ஏற்பட்டதில்லையென்று சொல்லப்படுகிறது. சர்க்கார் பக்கம் தோற்றது குறித்து வருத்தப்படுகிறவர்கள், அந்த நேரத்தில்—வாக்கெடுப்பு நேரத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூடத்திற்குள் இல்லையென்று சமாதானம் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் எம். பி.க்கள் அந்த நேரத்தில் இல்லாதது உண்மைதான்; ஆனால் அவர்கள் இருந்திருந்தால் மட்டும் சர்க்கார் சார்பிலே ஓட்டளிப்பார்கள் என்று எப்படி நிச்சயம் செய்ய முடியும்? பாராளுமன்றத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் ஒரு கூடத்தில் இட்லி, காபி, இருக்கிற காரணத்தால்தான் உறுப்பினர்கள் அங்கேயே போய்விடுகிறார்கள்; ஆகவே அந்தக் கூடத்தை மூடிவிடவேண்டும் என்று டெல்லி சட்டசபையிலே காங்கிரஸ் முக்கியஸ்தர் ஒருவர்பேசி இருக்கிறார். அந்த நேரத்தில் கல்கத்தாவிலிருந்த பண்டித நேரு, டில்லி திரும்பியதும் எம். பி.க்களுக்கு ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கிறார். அதிலிருந்து இட்லிக் கடையில் இருந்தவர்களில் சிலர் மந்திரி என்றும் தெரியவருகிறது. ஏனென்றால் குறிப்பிட்ட சில மந்திரிகள் வாக்கெடுப்பு நேரத்தில் இல்லையென்று கூறப்படுகிறது.

உறுப்பினர்கள் ஆஜராகாமலிருந்ததற்கு இரண்டுவிதக் காரணங்களைக் கூறமுடியும். பாராளுமன்றத்தை விளம்பர சாவடியாக எண்ணி--பட்டிமண்டபமாக மதித்து விளையாட்டுப் பிள்ளைகளைப்போல இட்லிக் கடையில் மண்வீடு கட்டி விளையாண்டிருக்கவேண்டும்; அல்லது மொழிவழி மாநிலப் பிரிவினைபற்றிய சர்க்கார் கொள்கையே காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வேப்பங்காயாக இருந்திருக்கவேண்டும்! ஏனென்றால் மொழிவழி மாநிலப் பிரிவினையைப் போராட்டக் காலத்திலே தோற்றுவித்த காங்கிரசே, பிறகு கல்யாணிக் காங்கிரசில், மொழிவழி மாநிலப் பிரிவினைக் கிளர்ச்சியில் பங்கேற்கும் காங்கிரஸ் உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானித்ததல்லவா? ஆகவே, நேருவுக்காக காங்கிரசில் உள்ளவர்கள்--பாராளுமன்றத்திலே கட்சிக்கு விரோதமாக வாக்களித்தால் நேருவுக்கு கௌரவக் கேடு என்று எண்ணிய 'அப்பாவிகளாக' வெளியேறி இருக்கலாம்! பாராளுமன்றக் காங்கிரஸ் கட்சி தனது பலவீனத்தை--காங்கிரஸ் உறுப்பினர்களின் ஒத்துழையாமையை 'இட்லிக் கடைமீது பழிபோட்டுத் தீர்த்துக் கொண்டிருக்கலாம். மொத்தத்தில் இது ஒரு அவமானம்தான்! நம்பிக்கை வைத்துத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவர்கள் முக்கிய பிரச்சினை வாக்கெடுப்பாகும்போது இல்லாமலிருந்தது, அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களை அவமதிப்பதாகும்! சர்க்காரின் கருத்துப் பிடிக்காமல்தான் வெளியேறி இருந்தார்களென்றால், நெஞ்சில் பட்டதைச் சொல்ல முடியாத கட்சியில் இருப்பதும் அவமானம்தான்!

ஓட்டுரிமை வாங்கிக் கொடுத்து விட்டோம் என்கிறார்கள். அந்த ஓட்டுரிமை அங்கே தற்கொலை செய்துகொண்டிருக்கிறது. அதோ! புல்கானின் பாதச்சுவடு! இன்னும் மறையவில்லை! மனிதகுலப் புனித உருவங்களின் நிழல் இன்னும் தெரிகிறது! அதற்குள் டில்லியிலே இந்தக் குழப்பம்! புல்கானிங்கிற்குத் தந்த வரவேற்பு வெளிவேடத்திற்குத்தானா? இந்தியா வல்லரசாக வேண்டுமென்று ஆசைப்பட்டால் மட்டும் போதுமா? கவனமெல்லாம் இட்லிக் கடையில்தானே இருக்கிறது!

இவர்கள்தான் கூறிக் கொள்கிறார்கள் ''காங்கிரசைத் தவிர வேறு யாருக்கும் இந்த நாட்டை யாளுவதற்கு யோக்கியதில்லை'' என்பதாக. இதில் உண்மை, நாணயம், நாட்டுப் பற்று எந்த அளவு இருக்கிறது என்பதை டில்லி சம்பவத்திற்குப் பிறகு நாடறிந்திருக்கும்.

அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்கப் பாடு பட்டவர்கள் நாங்கள்தான்; எனவே இனி எல்லாஇன்பங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று சொன்னாலாவது கொஞ்சம் அர்த்தமுண்டு; ஏதோ உழைப்பின் பேரிலே நம்பிக்கை வைத்துச் சொல்கிறார்கள் என்று நாமும் இருந்து விடுவோம். ஆனால் திறமைசாலிகள், என்று சொல்லிக் கொண்டு மன்றமேறி இத்தகைய 'தூங்கு மூஞ்சி' நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்தால் யார்தான் வேதனைப்படாமலிருப்பர். இந்தியத் துணைக் கண்டத்தின் அத்தனை மாநிலத்து முக்கியஸ்தர்களும் மாநிலப் புனரமைப்புத் தீர்ப்பைக் குறித்து இன்று என்ன? 'நாளை என்ன? என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது அது பற்றிய விவாதத்தில் உறுப்பினர்கள் மன்றத்திலில்லை, இட்லிக் கடையிலிருந்தார்கள் என்கிறபோது இவர்களெல்லாம் இன்னொரு முறை எப்படி மக்கள் முன்பாகப் போய் நிற்கப் போகிறார்கள் என்ற ஐயம் தோன்றுகிறது நமக்கு! அப்படித்தானே இருக்கும் மக்கள் குரலை மகேஸ்வரன் குரல் என்று எண்ணுவோர் அத்தனை பேருக்கும்! ★

பொங்கல் வாழ்த்து

கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள், கருத்தைக் கவரும் காதற் சித்திரங்கள், உள்ளத்திற்கு உவகை யூட்டும் உயர்ந்த கருத்துக்கள் பொறிக்கப்பட்ட **பொங்கல் வாழ்த்துக்களும், கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களும் தயாரிப்பாளர்கள்.**

முருகன் பேப்பர் ஸ்டோர்ஸ்

26. சைனுபஜார், தெப்பக்குளம் P. O, திருச்சிராப்பள்ளி

குறிப்பு: மாதிரிப் பிரதிகளுக்கு ரூபாய் 1-4-0க்கு தபால் தலைகள் அனுப்பவும்.

வேங்கடத் திருவிழா

கண்ணதாசன்

9

எந்த முதலாளி என்னை வேட்கை தணிக்கும் பாத்திரமாக மாற்ற விரும்பினரோ, அதே முதலாளியின் படம்தான் அது! அதில் அவர் மட்டுமா இருந்தார்? அவர் மடியில் சாய்ந்தபடி, நான் தங்கியிருந்த வீட்டுப் பெண்ணும் இருந்தாள்! ஒரு மாணவி—காலம்போன கட்டையின் மடியில்! நான், கல்லூரி விடுதி மாணவிகளிடம் அந்த முதலாளியின் பெயரைச் சொல்லியிருந்தேனே தவிர, இவளிடம் சொல்லவில்லை. பொதுவாக ஒரு முதலாளி என்றே சொன்னேன்—சொல்லியிருந்தால் ஒரு வேளை அவள் து கதையையும் கேட்டிருக்கலாம். அல்லது, அவருக்காகப் பரிந்துகொண்டு அவள் எனக்கு இடம் கொடுக்க மறுத்தும் இருக்கலாம். விரக்தி கலந்த சிரிப்பொன்றை வீசிவிட்டு, நான் அந்தப் படத்தை மேலாடைக்குள் வைத்துக்கொண்டு, பாலனிடம் வந்தேன்.

"என்ன அது?" என்ருர் பாலன். "ஒன்றுமில்லை!" என்று கூறிவிட்டு அமர்ந்தேன். எனக்காக அவர் மிகவும் வருந்திஞர். ஒரு இதயத்தை இன்னொரு இதயம் விசிறிக் கொடுத்தால் சூடு தணிகிறது. பாலனின் அனுதாப வார்த்தைகள் அப்படித்தான் என் இதயச் சூட்டைத் தணித்தன. காற்ருடி காற்றில்தான் பறக்கிறது என்ருலும் கயிறு அதைக் கட்டுப்படுத்துவதால்தானே பறப்பதில் கூட ஒரு அழகு ஏற்படுகிறது. பிறரது வேதனைகளைப் பரிமாறிக் கொள்ளும் பாச உள்ளம், அந்த வேதனையையே ஒரு விநோதமான ஆனந்தமாக மாற்றிவிடுகிறது. பாலன் என்னிடம் காட்டிய அன்புக்கு என் உள்ளம் இளகிக் கொடுத்தது. பேச்சின் இடையே ஒவ்வொரு சமயம் நான் கண்ணீர் விட்டு அழுத போது 'அழாதே அம்மா' என்று ஆறுதல் கூறிய அவர் ஒரு தடவை தன் கைக்குட்டையால் என் கண்ணீரைத் துடைத்தும் விட்டார். என் மேனி சிலிர்த்தது. அந்த நேரத்தில் அவர் எனக்கு எந்த யோசனை சொன்ஞலும் ஏற்பதற்குத் தயாராக இருந்தேன். முழு ரகசியங்களையும் எல்லோரிடமும் பரிமாறிக்கொள்ள முடியாது. அந்தஇரகசியங்களுக்குச் சரியான இடம் கொடுத்து ஆராயும் பண்புள்ளவர்களோடு மட்டுமே பரிமாறிக்கொள்ள முடியும். பாலன் அதற்கு ஏற்றவர் என்று சில விஞடிகளிலேயே என் மனம் தீர்மானித்துக் கொண்டது. கூச்சமின்றி எல்லாவற்றையும் அவரிடம் சொன்னேன். அதோடு வாழ்வில் என் ஆசையையும் சொல்லி வைத்தேன்.

"நீ என்னேடு வந்துவிடு, யாருக்கும் தெரியாத ஒரு இடமாகப் பார்த்து தங்கிக் கொள்ளலாம். உன்னை நான் காப்பாற்றுகிறேன்" என்ருர். நான் சிறிது கூடத் தயக்கமின்றி சரி என்றேன். அந்தப் பெண் வந்ததும் சொல்லிவிட்டுப் போய்விடுவது என்றும் முடிவுகட்டிக் கொண்டேன். அப்போது கதவு தட்டப்பட்டது. எழுந்துபோய்த் திறந்தேன். அந்தப் பெண்தான் வந்திருந்தாள். வீட்டிற்குள் பாலன் இருப்பதையும் அவள் வந்திருந்த சமயத்தில் கதவு தாளிடப்பட்டிருந்ததையும் ஒன்று கூட்டி கணக்குப்போட்டோ என்னவோ, அவள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். நான பளிச்சென்று பாலனை அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன். எங்கள் குடும்ப நண்பர் என்றும் சொல்லி வைத்தேன். அவள் அதைச் சாதாரணமாக வாங்கிக் கொண்டாள், நம்பிக்கையில்லாதவள் போல். நான் பாலனேடு செல்லப்போவதைப் பற்றி அவளிடம் கூறினேன். அவள் சிரித்தபடியே "எப்படியோ சந்தோஷமாக இருந்தால் சரிதான்" என்ருள். ஆம், அவள் முடிவான கணக்கே போட்டு விட்டாள்.

நான் புறப்படுவதற்காகத் திரும்பினேன். பாலன் என்னைக் கொஞ்சம் உட்காரச் சொல்லிவிட்டு தான் கார் கொண்டு வருவதாகச் சொல்லிச் சென்று விட்டார். திடீரென்று நான் எதிர்பாராத விதமாக சினிமாக் கம்பெனி முதலாளி உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும் என் இருதயம் நடுங்க ஆரம்பித்தது. அவரும் கோபத்தில் குதிக்க ஆரம்பித்தார். அந்தப் பெண் ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டு நின்ருள். முதலாளி வெறிபிடித்தவர்போலக் கதவைத் தாளிட்டார். "இன்றைக்கு உன்னைக் கெடுப்பதுதான் என் வேலை" என்ருர். எட்டிப் பிடித்தார்; கட்டியணைத்தார். நான் திமிறினேன். என்னைத் திமிறவிடாமல் அந்தப்பெண், முதலாளிக்கு ஒத்தாசை புரிந்தாள்! நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! உண்மை இது. அவ்வளவு கேவலமான ஒரு பெண்பிறவியையும் நான் வாழ்க்கையில் அன்று சந்தித்தேன். என்ன, ஏது என்று புரியாமலேயே என்னைக் கெடுப்பதற்கு முதலாளிக்குத் துணை புரிய ஆரம்பித்தாள் அவள்! திடீரென்று வாசலிலே கார் வந்து நின்றது. நான் யூகமாக "போலீஸ்! போலீஸ்!!" என்று கத்தினேன். முதலாளி திகைத்துப் பிடிப்பைத் தளர்த்திஞர். ஓடிப்போய்க் கதவைத் திறந்தேன். பாலன் உள்ளே நுழைந்தார். என் அலங்கோல நிலையைக் கண்டார். பளிச்சென்று முதலாளியின் சட்டையைப் பிடித்துக்கொண்டு கன்னத்தில் மாறி மாறி அறைந்தார். உதவிக்கு ஓடிவந்த அந்தப் பெண்ணை நானும் ஆத்திரம் தீர அறைந்தேன். அறைந்துவிட்டு வேக வேகமாக ஓடிப்போய் காரில் ஏறிக்கொண்டேன். பாலனும் வந்து ஏறிக்கொண்டார். அங்கிருந்து புறப்பட்டு நேரே பழையவண்ணுரப் பேட்டைக்கு வந்து சேர்ந்தோம். அங்கே ஒரு நண்பர் வீட்டில் என்னைத் தங்க வைத்தார். அந்த நண்பரின் மனைவி என்னிடம் அளவுகடந்த அன்பு காட்டிஞள். அவர்கள் வீட்டு மாடியில் தனியாக ஒரு அறைமட்டுமிருந்தது. அதை எனக்கு ஒதுக்கிக் கொடுத்தார்கள். நான் அதில் தங்கிக்கொண்டேன். பாலன் ஆபீஸுக்குப் போய்விட்டு நேரே அங்கு வந்துவிடுவார். வெகு நேரம் வரை பேசிக்கொண்டிருப்போம். இப்படியே இரண்டு நாட்கள் கழிந்தன. அந்த இரண்டு நாட்களிலும் பாலன்மீது எனக்கு அளவு கடந்த அன்பு ஏற்பட்டிருந்தது. வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன்; அவர் பிரிந்து சென்றதும் இரவெல்லாம் அமைதி இழந்து தவிப்பேன். மூன்ரும் நாள் மாலையில் வழக்கம்போல் அவர் வந்தார். பேசிக்கொண்டிருந்தோம். என்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகச் சொன்ஞர். நான் விரும்பியதும் அதுதானே! பூரித்து, சம்மதித்தேன். அந்த நேரத்தில் அவர் உணர்ச்சி வசப்பட்டதும் உண்மை. தனிமையில் ஒரு ஆணும் பெண்ணும் சந்தித்து அதிக நேரம் அளவளாவச்சந்தர்ப்பம்கிடைத்தால்... யார் மனதுதான் உணர்ச்சிவசப்படாது! பாலன் என்னை அருகில் இழுத்துக் கொண்டார். ஆம்... ஆம்... முத்தமிட்டார். உடனே எழுந்து போய்விட்டார்.

—இந்த இடத்தில், சுந்தரம், இந்த வார்த்தைகளை எதிர்பாராதவன் போலவும், விரும்பாதவன் போலவும் முகத்தைச் சுளித்து, "அவர் தொடவுமில்லை; நான் கெடவுமில்லை! என்றீர்களே!" என்று கேட்டான். "ஆம்; தொடவில்லை என்பதில் நான் குறிப்பிட்ட பொருள் வேறு!" என்று கூறி விட்டுத் தலைகுனிந்த அம்பிகா, மீண்டும் தொடர்ந்தாள்:

இப்படி வளர்ந்தது எங்கள் அன்பு. மறுநாள் காலை, சுமார் எட்டுமணி இருக்கும். என் தாய், பாலன் இரண்டுபேரும் வந்தார்கள். முதலாளி, தாய்க்குச் சொல்லி அனுப்பியிருக்கிருர்; அதஞல்தான் பாலனைக் கூட்டிக் கொண்டு வருகிருள் என்பதை நான் உடனே தெரிந்துகொண்டேன். பாலனிடம் என் தாய் மிகவும் சமாதானமாகப் பேசிக் கெஞ்சிஞளாம். பாலன் சம்மதித்து என்னை அனுப்ப வந்தாராம்!—நான் தாயுடன் சென்றேன், பாலன் விருப்பப்படி.

எங்கள் வீட்டில் இருக்கும் போதும் பாலன் அடிக்கடி வருவார்; சந்தித்துப் பேசுவார். எப்படியும் ஒரு நாள், திருமணத்தை முடித்துவிடுவது என்று முடிவுகட்டிக் கொண்டிருந்தோம். 'நாட்டியக் கச்சேரி'களுக்குமட்டும் என் சம்மதம் பெற்று என் தாய் ஏற்பாடு செய்து வந்தாள். "எனக்கு அவர்தான் — அவருக்கு நான்தான்!" என்று பாலனைப்பற்றி, என் தாயிடமே நான் கூறிவிட்டேன். இந்த நிலையில் திடீரென்று, என்னிடம்கூடச் சொல்லாமல் பாலன், ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். நான் திகைத்தேன்; அழுதேன். விஷயத்தை அறிந்த தாய் எனக்குப் போதனை செய்ய ஆரம்பித்தாள். "இதுதானடி உலகம்! பேசாமல், தொழிலில் இறங்கிவிடு. உல்லாசமாக வாழலாம்" என்று ஆசை காட்டத் துவங்கிஞள். மைனர்களைக் கூட்டி வந்து, மயங்கவைக்கத் திட்டமிட்டாள். சில்ரைக் கூட்டியும் வந்தாள். அவர்களில் ஒருவன், என்னைப் பலவந்தமாகப் பிடித்துஇழுத்து, கடித்து, ஆடையைக் கூட்க் கிழித்து விட்டான். "இனி

இருந்தால் மானத்தோடு வாழ முடியாது!" என்று கருதி, நான் புறப்பட்டேன். பாலன், முன்பே தன் சொந்த ஊர்பற்றி என்னிடம் கூறியிருந்தார். ஆகவே சுலபத்தில் மேலைச்சிவபுரி வந்தேன். திருமணத்திற்குப் புதுக்கோட்டைக்குப் போயிருப்பதாகத் தெரிந்துகொண்டேன். பாலனுக்குத் திருமணம்! பின்பு எதற்காக நான் வாழவேண்டும்? அதனால் தான் தற்கொலை செய்து கொள்ளக் கார்முன்பு விழுந்தேன். விழும்போது, அந்தக் கார் உங்கள் காராகவே இருக்குமென்று நான் கருதவே இல்லை! பிறகு நடந்தது உங்களுக்குத் தெரியும்!

—என்று அம்பிகா தன் வரலாற்றை முடித்தாள். சுந்தரம் பெருமூச்சு விட்டான். பொழுது பலபலவென்று விடிய ஆரம்பித்தது. அந்த மங்கிய இளங்காலைநேரம் இருவர் மனதிலும் புத்துணர்ச்சியை எழுப்பிற்று. புகைவண்டி, கடகடவென்று பறந்துகொண்டிருந்தது. தாம்பரத்தைத் தாண்டிவிட்டால், புகைவண்டிக்கு வெறியே பிடித்துவிடும், எழும்பூர் வரும்வரை!—எழும்பூரில் வண்டி வந்து நின்றது. கைதிகளாகவே, சுந்தரமும் அம்பிகாவும் இறக்கப்பட்டார்கள். சுந்தரம், துடிதுடிக்கும் மனதோடு, யார் இன்னொரு கைதி என்று திரும்பிப் பார்த்தான். பாலன்! பாலனேதான்! சுந்தரத்திற்கு நா எழவில்லை. திணறி, "பாலன்!" என்று கத்தினான். பாலன் திரும்பிப் பார்த்தான். "சுந்தரம்" என்றான் நாக்குழற! அம்பிகா, பித்துப் பிடித்தவள் போல் நின்றாள். போலீசார் பாலனை இழுத்துக்கொண்டே வேறுபுறம் சென்றுவிட்டார்கள். சுந்தரம்கூட வந்த போலீஸ்காரரில் ஒருவர் ஆச்சரியமாக, "அவர் பேரும் பாலன் தானா சார்!" என்றார். சுந்தரம் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். பிறகு, சுந்தரமும் அம்பிகாவும் பஸ்ஸில் ஏற்றப்பட்டு, தியாகராயநகர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். பாலனை எங்கே கொண்டு சென்றார்கள் என்பதை அறிய முடியவில்லையே என சுந்தரம் கவலையில் மூழ்கினான். அம்பிகா தேறுதல் கூறினாள்.

சிறிது நேரம் சென்றது. வாசலிலே போலீஸ் வண்டி ஒன்று வந்து நின்றது. போலீஸ் ஸ்டேஷனுக்கு சாதாரணமாகவே வண்டி வரும், போகும்—என்று எண்ணி சுந்தரம் அலட்சியமாக இருந்தான். ஆனால் ஒருவேளை பாலன் அதில் வரலாமென்று அம்பிகா கூர்ந்து கவனித்தாள். அவள் எதிர்பார்த்ததுபோலவே பாலன் அதிலிருந்து இறக்கப்பட்டான். அம்பிகா சுந்தரத்திடம் "அதோ பாலன்"—என்றாள். பாலன் உள்ளே கொண்டு வரப்பட்டான். அவன் முகம் வாடி இருந்தது. விரக்தியடைந்த நிலையில் காணப்பட்டான். சுந்தரம், அவன் எப்படிக் கைது செய்யப்பட்டான் என்பதை அறியத் துடித்தான். பாலனும் சுந்தரத்திடம் அதையே கேட்க விரும்பியவனாகக் காணப்பட்டான். முதலில் பாலனே துவங்கினான்:

"உன்னை எதற்காகக் கைது செய்தார்கள்?"

சுந்தரம் சிரித்து, "நீதான் நானென்று நினைத்து" என்றான்.

போலீஸ் இன்ஸ்பெக்டர்களும் மற்றவர்களும் ஒரே வழக்கில் இருவர் கைதுசெய்யப்பட்டிருப்பது குறித்து குழப்பத்தோடு வாதாடிக்கொண்டிருந்தார்கள். பாலன் சுந்தரத்தினருகிலேயே உட்கார வைக்கப்பட்டான். இருவரும் மெதுவாக நடந்த நிகழ்ச்சிகளைப் பரிமாறிக்கொண்டிருந்தார்கள். அம்பிகா அதைக் கவனித்தும் கவனிக்காதவள் போலிருந்தாள். பாலன் அம்பிகாவின் முகத்தைப் பார்க்கவே வெட்கப்பட்டான். அப்போது அவர்கள் சற்றும் எதிர்பாராத விதமாக அம்பிகாவின் தாயார் ரெங்கலெட்சுமி அங்கு கொண்டு வரப்பட்டாள். அம்பிகா அவளை எரித்துவிடுபவளைப்போலப் பார்த்தாள். ரெங்கலெட்சுமியும் பழிதீர்த்துக்கொண்ட பெருமையோடு பாலனையும் அம்பிகாவையும் மாறி மாறிப் பார்த்தாள். பாலன் சுந்தரத்திடம் மெதுவாக, "இதுதான் அம்பிகாவின் தாய்" என்றான். சுந்தரம் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அம்பிகாவைப் பார்த்து மெல்லச் சிரித்தான்.

ரெங்கலெட்சுமியிடம் இன்ஸ்பெக்டர் அம்பிகாவைக் காட்டி "இதுதானே உங்க பொண்ணு"—என்று கேட்டார். ரெங்கலெட்சுமி 'ஆமாம்'—என்றாள். பிறகு பாலன் சுந்தரம் இருவரையும் காட்டி "இந்த ரெண்டு பேருலே கடத்திக்கிட்டுப்போன ஆசாமி யாரு?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். ரெங்கலெட்சுமி பாலனைக் காட்டி 'இவன்தான்' என்றாள். இன்ஸ்பெக்டர் ஒரு பேப்பரில் ஏதோ எழுதி ரெங்கலெட்சுமியிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார். சுந்தரத்தைக் கூப்பிட்டு "உங்க பேரும் பாலன்தானா?" என்று கேட்டார். இனிப் பொய் சொன்னாலும் பயனில்லை—பாலனுக்கு உதவ முடியாது என்று கருதிய சுந்தரம், "இல்லை—என் பெயர் சுந்தரம்"—என்றான். "பின்னே ஏய்யா பொய் சொல்றீங்க? அதனால்தானே அனாவசியமா உங்களுக்கும் தொல்லை—எங்களுக்கும் தொல்லை! ஒருவேளை நண்பரைக் காப்பாத்துவதற்காகச் சரடு விட்டீங்களோ? இந்தச் சரடு எங்காவது நிலைக்குமா? இது கோர்ட் விவகாரமய்யா! இதே பொய், வழக்குக்குப் பிரதிகூலமா அமைந்திருந்ததனா உங்க மேலே தனியா ஒரு கேஸ் போடவேண்டியிருந்திருக்கும். நண்பன் பாசமெல்லாம் வெளியிலே வச்சுக்கணும். கோர்ட், போலீசு இதிலேயெல்லாம் காட்ட ஆரம்பிச்சுட்டீங்கன்னா ரெம்ப ஆவஸ்தைப் படுவீங்க. சரி சரி போங்க, உங்களை விடுதலை பண்ணியிருக்கேன்"—என்றார் இன்ஸ்பெக்டர். சுந்தரம் சிரித்தான். வேறு என்ன செய்ய முடியும்? இருதயமிருந்தால் நியாயம் வழங்க முடியாது என்பதற்காகத்தானே சட்டம் இருதயத்தை மூடிவிட்டுத் துலாக்கோலைமட்டும் கையில் வைத்துக் கொண்டிருக்கிறது! பிறகு இன்ஸ்பெக்டர் அம்பிகாவை அழைத்து ஒரு காகிதத்தில் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டு அவளையும் விடுதலைசெய்தார். "சமன் வரும் கோர்ட்டிலே ஆஜராகணும்" என்றும் ரத்தினச் சுருக்கமாகச் சொல்லி வைத்தார்.

பாலன் தன்னையும் விடுதலை செய்துவிட்டுச் சமன் அனுப்புவார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால் இன்ஸ்பெக்டர் போலீஸ்காரர்களைப் பார்த்து "இவரை லாக்கப்பில் போடுங்கள்" என்றார். அம்பிகா பதறினாள். 'பாலன்!'—என்று கதறிவிட்டாள். சுந்தரத்தின் கண்களிலே நீர் ததும்பியது. பாலன் தன்னையறியாமலே அழ ஆரம்பித்தான். அந்தக் கண்ணீர் மேலும் சுந்தரத்தைப் பிழிந்தெடுத்தது. அவன் மனக்கண் முன்பு கதறி அழும் கோலத்தில் இந்திரா தோன்றினாள். சுந்தரம் குழந்தை போல் தேம்பி அழ ஆரம்பித்தான். அம்பிகா இதயத்தைக் கைகளால் சமாதானப்படுத்துபவள்போல கைகளை மூடி மார்பில் சேர்த்தவாறு கதறினாள். இன்ஸ்பெக்டர் சுந்தரத்தைப் பார்த்து, "படிச்சவங்க இப்படி அழலாமா?" என்றார். ஏதோ நிறையப் படித்தவர்கள். இயற்கை உணர்ச்சிகளிலிருந்து தப்பித்துக்கொண்டு அதிமனிதத் தன்மைக்கே போய்விடுகிறார்கள் என்று சிலர் கணக்குப் போடுகிறார்கள். துன்பத்தைத் தீர்க்க வழி சொல்பவனெல்லாம் துன்பமில்லாமலா இருக்கிறான்! இருதயத்தைத் துன்பமில்லாமல் வைத்திரு; எதையும் சாதாரணமாக நினைத்துவிடு — என்று போதிக்கிற தத்துவஞானி கூட வந்த துன்பத்தில் ஒரு கால்மணி நேரமாவது உழன்று விட்டுத்தான் மீள்கிறானே தவிர, அது வராமலே தடுத்து நிறுத்தமுடியவில்லை. சுந்தரமும் சராசரி மனிதன்தான். சொல்லப் போனால் சராசரி மனிதர்களிலே படிக்காதவர்களைக் காட்டிலும் படித்தவர்கள்தான் பலவீன இதயங்கொண்டவர்களாக இருக்கிறார்கள். காரணம், துன்பம் எப்படி வருகிறது என்பதைப் படித்துவிட்டுஅவர்கள் துன்பப்படுகிறார்கள். பின்பு அதை எப்படித் தீர்ப்பது என்பதைப் படித்து விட்டுத் தீர்த்துக் கொள்கிறார்கள். காலிலே புண் வந்துவிட்டது என்றால் படித்துவிட்ட சிந்தனையாளன் அந்தப் புண்ணைமட்டும் பார்ப்பதில்லை. அதற்குமேல் கற்பனைகளையும் அடுக்குகிறான். அந்தப் புண் சீழ் பிடிப்பதுபோலவும், பிடித்து உடம்பு முழுவதும் பரவுவது போலவும், அதில் தான் படிந்து விடுவது போலவும் காரண காரியங்களை உண்டாக்கிக் கொண்டு கற்பனைகளை வளர்த்து அதிர்ச்சியடைகிறான். சிந்தனையில்லாத மனிதன்தான் தன் வரைக்குச் சிரித்து வாழத் தெரிந்தவன். இன்ஸ்பெக்டரின் கேள்விக்கு சுந்தரம் பதில் சொல்லவில்லை. ஆனால் அவன் இதயம் என்னவோ உனக்கு இதுமாதிரி நேர்ந்தால் தெரியும் என்று சொல்லிக்கொண்டிருந்தது.

சுந்தரம் பாலனின் அருகில் சென்று "மீண்டும் வந்து பார்க்கிறேன். கவலைப்படாதே! நானிருந்து எல்லாவற்றையும் கவனிக்கிறேன்." என்று கூறிவிட்டுத் திரும்பினான். அம்பிகா கண்ணீர் அருவியாக நின்றவள் பாலனின் காலைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு சுந்தரத்தைப் பின் தொடர்ந்தாள். இதையெல்லாம் கவனித்துக்கொண்டு அதுவரை அங்கேயே நின்று கொண்டிருந்த ரெங்கலெட்சுமி படக்கென்று அம்பிகாவின் கையைப்பற்றி இழுத்து 'வாடி வீட்டுக்கு!' என்றாள். அம்பிகா கையை உதறிக்கொண்டு, 'அடி சண்டாளி! நீ எனக்குத் தாயுமல்ல, நானுனக்கு மகளுமல்ல. பேசாமல் போ!" என்றாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் அம்பிகாவிடம் வந்து "உன்னை உன் தாயிடம் ஒப்படைத்திருக்கிறேன். நீ மைனர்ப் பெண். போ உன் தாயோடு!" என்று கூறிவிட்டு ஒரு போலீஸ்காரரையும் துணைக்கு அனுப்பினார். சுந்தரத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்தபடி அம்பிகா போலீஸ் வண்டியிலேறினாள். வண்டி புறப்படுவதற்குமுன் அம்பிகா பலமாக தன் வீட்டு விலாசத்தைக் கூறினாள். சுந்தரம் அதைக் கவனிக்கவில்லை. அவன் அசையாமல் நின்றுகொண்டிருந்தான். அவனைப் பிழிந்தெடுத்தது இன்ஸ்பெக்டர் சொன்ன ஒரு வார்த்தை, "அம்பிகா மைனர்ப் பெண்". கடத்தல் வழக்கு பாலனின்மீது!- அவன் ஆவி பிரிந்து விடும்போலிருந்தது. பைத்தியம் பிடித்தவன்போல் ஓடி ஒரு வாடகைக் காரில் ஏறிக்கொண்டு ஒரு ஓட்டலில் போய் இறங்கினான். அங்கே ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். அறைக் கதவைத் தாளிட்டு விட்டு படுக்கையில் சாய்ந்து விம்மி விம்மி அழுதான். "அப்பாட, நிறைய அழுதுவிட்டால் எவ்வளவு நிம்மதி ஏற்படுகிறது!" சிறிது நேரத்திற்கெல்லாம் எழுந்து முகம் அலம்பிவிட்டு அங்கிருந்த டெலிபோன் மூலமாக இரண்டு தந்திகள் கொடுத்தான். ஒன்று புதுக்கோட்டைக்கு, மற்றொன்று மேலைச்சிவபுரிக்கு. அதில் தான் தங்கியிருக்கும் இடத்தையும் குறிப்பிட்டிருந்தான். நான்கு மணிநேரத்திற்குப் பிறகு மேலைச்சிவபுரியிலிருந்து பதில் தந்தி வந்தது. கரம் நடுங்கப் பிரித்துப் பார்த்தான். தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போன்ற உணர்ச்சி. அந்தத் தந்தியிலிருந்தது இது:

"இந்திரா மரணப்படுக்கையில்—உடனே புறப்படவும்—பதில்."



ஈழத்துக் கவிஞர்கள்

புறப்படு பகையை வெல்ல!

பொய்த்ததோ தமிழா வுந்தன் போர்த்திற மனைத்து மின்று
கைத்ததோ கன்னி யாமெம் கவினுறு தமிழின் தேறல்
பொய்த்திறன் கொண்ட சூழ்ச்சிப் பேடிகள் வகுத்த ஆட்சி
தைத்திட விலேயோ நெஞ்சைத் தமிழகம் மறந்த பாவி!

சீர்பெறும் தமிழன் வாழ்வைச் சிலப்பதி கார மாக்கிப்
பார்புகழ் இளங்கோ சொன்ன பண்புகள் மறந்து போச்சோ!
கார்முகில் போலும் கையாய்! கடமையை மறந்து விட்டாய்!
சேரனின் வீரந் தன்னைச் செல்லரித் ததுவோ இன்று!

வாழவே வழிவ குத்து வள்ளுவம் தன்னை யீந்து
ஆளவே உலகி னுக்கு அறிவுரை புகன்ற வீரன்!
சோழனின் சொந்தக் காரன்! சேர்ந்துபோய்க் கிடப்ப தென்னே?
மீளவே வழிவ குக்க விரைந்துநீ வினைமேற் கொள்வாய்!

ஆண்டிட உரிமை யற்ற அரசியல் அனுதை யானுய்
வேண்டிய உரிமை யெல்லாம் வீணர்தம் சொந்த மாக்கி
பாண்டியன் பரம்ப ரைநீ பஞ்சமேன் பாடு கின்றுய்?
பூண்டிடு போர்க்கோ லத்தைப் புறப்படு பகையை வெல்ல!

— நிலாவணன்

தமிழ்க்கடலே, எழுந்திடு!

பன்னிய புறமொழி விழைவெனுங் கங்குல்
    பைப்பய விடிந்தது படரொளி பரப்பி
மன்னிய நின்புக ழாயிரஞ் சுடர்க்கை
    வானவன் நாவெனு மலைமுக டுதித்தான்
துன்னிய புறமொழித் தாரகைச் சூழல்
    சுடரொளி யவிந்தன குவிந்தனர் தொண்டர்
என்னித யத்துறை முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே

தேனெனப் பாலெனச் செழுங்கரும் பூறுந்
    தீஞ்சுவைச் சாறெனத் தெள்ளமு தெனவே
மானன நோக்கிநின் வாய்மொழி கேட்டு
    மகிழுபு புறமொழி மாந்தரும் வந்தார்
பூநனை புனைகுழற் பொன்னனை யாளே
    பொற்சிலம் பலம்பிடு பூவடிப் பூவாய்
ஈனனை யும்மருள் முத்தமிழ்க் கடலே
    இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

—நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர்

காதலியாள்

கனஇருட்டைக் கதிர்கிழிக்கக் காலை யாக,
கஷ்டமெல்லாம் மறந்துவிடக், காற்று வாங்கும்
நினைவொடுயான் சென்றிருந்தேன், சோலை யூடு;
நீள்நிழல்கள் நிலத்தினிலே கோலங் கீற,
மனமுருகக் குயில்பாட, மயில்க ளாடும்,
மாமரங்கள் மலர்ந்துமணம் வீசுஞ் சோலை,
எனைமறந்து நடந்துசெல, எந்தன் ஆகம்
ஈர்த்தணைத்தாள் தென்றலவள். அந்த நேரம்:

வளைகின்ற இடையினிலே குடமொன் றேந்தி,
வார்குழலில் வாயவிழும் வனசம் ஏந்தி,
கிளிமொழியாள் என்னுடைய நெஞ்சைக் கிள்ளி,
இருதயத்தி லேபொருத்திச் சென்றுள் மாது!
அளிமொய்க்கும் அலங்காரப் பதுமப் பூப்போல்,
ஆவியெலாம் உருக்குகிற அழகு மார்பைக்
குளிர்கின்ற பூநிலவை முகில்வெண் பட்டுக்
கிழிசலினுல் மூடியபோல் மூடிச் சென்றுள்!

'தாசி'யவள் தலையிருந்து தண்ணீர் சொட்டித்
தனக்குவியல் தனில் தவழும்; தரள மாகும்;
வீசுகின்ற காற்றினிலே புரண்டு பொங்கும்;
விளையாடும்; வனப்பினுக்கு வனப்புக் கூட்டும்.
மாசியிலே பனிப்புகார்ப டர்ந்த போது,
மலர்ந்தொளிக்கும் வெயில்போல, மங்கை யாளின்
தேசுமிகும் முகம்பார்த்தால் கண்கள் கூசும்.
தேன்மொழியாள் என்நெஞ்சை அள்ளி விட்டாள்!

நடையழகில், நவமணிகள் இழைத்த வாயில்,
நயனத்தில், நெளிந்தங்கே நடன மாடும்
இடையழகில், இருதனத்தில், இருளைப் பிய்த்து
இரண்டாக்கி ஒடுகின்ற எழில்வ கிட்டில்
படைபடையாய் வந்தின்பம் பாய்ந்த போது
பரிதவித்தேன்! பாடுபட்டேன்! பட்சம் பொங்கக்
கடைவிழியில் கருவண்டைச் செலுத்திக் காதல்
கக்கவிட்டாள் காதலியாள்! கண்டேன் இன்பம்!

— 'மஹாகவி'

புயல் நிவாரணம்

பொதுச் செயலாளர் அறிக்கை

கடும் புயலாலும், பெரு மழையாலும் தாக்கப்பட்டு தஞ்சை—திருச்சி—மதுரை—இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் மீளாப் பெருங்கேடுகளுக்கு ஆளாகியிருக்கும் செய்தி நம்மை யெல்லாம் திடுக்கிட வைத்துத் திகைப்படையச் செய்கிறது. புயற் காற்றும், வெள்ளமும் நூற்றுக்கணக்கானவர்களின் உயிர்களை வவ்வி, ஆயிரக்கணக்கானவர்களை ஊனப்படுத்திப், பதினாயிரக் கணக்கானவர்களைத் திக்கற்றவர்களாகத் திரிய வைத்துக் கோடிக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ள பயிர்பச்சைகள்—மரஞ்செடிகள்—தோட்டந்துறவுகள்—வீடுகள் — பெருங்கட்டிடங்கள் — உணவுப்பொருள்கள் — கால்நடைகள் ஆகியவற்றைப் பாழாக்கியிருப்பது, தமிழகம் தாங்கிக்கொள்ள முடியாத பெருந் துக்கமும் துயரமும் நிறைந்த செய்தியாகும்.

புயலால் பாதிக்கப்பட்டு வாடுபவர்களுக்கும், உற்றார்-உறவினரை இழந்து வருந்துபவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தக்க நிவாரணமளிக்க அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளும். சென்னை அரசாங்க முதலமைச்சர் அவர்களும் முன்வந்து, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது சற்று ஆறுதலளிக்கக் கூடியதாக இருக்கிறது. சென்னை அரசாங்கம் மிகத் தீவிரமான நிவாரண நடவடிக்கைகளில் மேலும் இறங்கவேண்டும் என்று சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதோடு, இந்தியப் பேரரசு சென்னை அரசாங்கத்துக்குப் பக்கத்துணையாக இருந்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியப் பேரரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

புயலால் தாக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள தி. மு. கழகக் கிளைகளும், தி. மு. கழகத் தோழர்களும் ஆங்காங்கு ஏழை எளியவருக்கு உதவி செய்யும் நிவாரண வேலைகளில் உடனடியாக இறங்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். பிற மாவட்டங்களிலுள்ள கிளைகளும், கழகத் தோழர்களும், உணவு-உடை—உறையுளுக்கு வேண்டிய பொருள்கள்—பணம் ஆகியவற்றைத் திரட்டிப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உரியவர்கள் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நிவாரண வேலைகளில் பிற பொதுநல ஊழியர்களோடும், பிற கட்சியினரோடும் இணைந்து நின்று பணி புரிய வேண்டி ஏற்படின், அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும்படி கழகத் தோழர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புயல் நிவாரண நிதிக்கு என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சென்னை முதலமைச்சரிடம் ரூ. 1,000 (ஆயிரம்) அனுப்பப்பட்டிருக்கிறது.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

''அறிவகம்'', சென்னை-13
7—12—1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.



இலங்கை-மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்கத் தோழர்களோடு கண்ணதாசன்.

தமிழர் பண்பாடு

கண்ணதாசன்

"உலகமொழிகள் அனைத்திலும் மிகத் தொன்மை வாய்ந்தது தமிழ்மொழி. உருவத்தாலும், ஒலியாலும் வேறுபட்டு இன்று நிலவும் பல மொழிகளின் மூலமொழி தமிழ். சிற்றரசர்களும் பேரரசர்களும் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக்கொண்டு தமிழ் வளர்த்தார்கள். மொழிக்கு இலக்கணம் சமைத்து - சங்கங்களில் வளர்த்த பெருமை தமிழைவிடவேறு மொழிகளுக்குக் கிடையாது. கடல் கடந்து, 'கள்வத்தோணியாக அல்ல - தமிழன் வெற்றி வீரனாகச் சென்ற நாடுகள்தோறும் கன்னித்தமிழ் சென்றது. செங்கோலோச்சியது. இலங்கை-புட்பகம்-சாவகம், போர்னியோ ஆகிய நாடுகள் தமிழ் மன்னர்களின் 'ஆட்சிக்குட்பட்டிருந்தன என்ற சரித்திரச் சான்றுகளை யாரும் மறைத்துவிட முடியாது" பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் படிக்கும்தோறும் அன்று சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த நம் இனத்தின் பெருமை நமக்குப் புலனாகிறது. 'அறம்' தமிழ்மக்கள் வாழ்வோடு கலந்து கிடந்தது. மனையறம்-மக்களறம்-மன்னன் அறம் உயிரினும் மேலாக மதிக்கப்பட்டு வந்திருக்கிறது. மானத்திற்குப் பங்கம் ஏற்பட்டால் உயிரோடு வாழும் வாழ்க்கையை உதறியெறிந்திருக்கிறார்கள் பண்டைத் தமிழ்மக்கள். தாய்மொழியைப் பழித்தாலும் சரி, தமிழனைப் பழித்தாலும் சரி, தமிழகத்தை இழித்துரைத்தாலும் சரி தமிழ்மக்கள் உள்ளமும் உதிரமும் கொதிப்படைந்தன. கங்கை நதி தீரத்திலே கல்யாண மண்டபமொன்றில் இரண்டு மன்னர்கள், கனக விஜயர்கள், கன்னித்தமிழ் நாட்டைப் பழித்துரைத்தார்கள் என்ற செய்திகிட்டியதும், செங்குட்டுவன் போர்ப் படை இமயப்பனிவரை நோக்கிச் சென்றது. வென்றது. பழித்துரைத்த மன்னர் தலையில் பாறாங்கல். இது பண்டைத்தமிழ் மன்னன் வரலாறு.

போர்க் களத்திலே தன் கணவனைப் பலிகொடுத்துவிட்ட பின்பு தன் பாலகன் தலைசீவி, கையில் வேல் கொடுத்து களம் அனுப்பி, 'வீர மரணம் எய்தினான் தன் மகன்' என்ற செய்தி கேட்டு ஆனந்தம் கொண்டாள் அன்று வாழ்ந்த தமிழ்ப்பெண்.

தமிழக வரலாற்றின் எந்தப் பகுதியைப் புரட்டினாலும் போரும், காதலும் முதலிடம்பெற்று விளங்குவதைக் காண்கிறோம்.

திருமண வினையிலும் வலிமை மிக்க மாட்டைப் பொருதி மங்கையொருத்தியின் கழுத்தில் மாலை சூட்ட வேண்டியிருந்தது அன்று. மாட்டைப் பொருதி முறியடித்து வா என்று இன்று சொன்னால் கூறாமல் சந்நியாசம் கொள்வார்கள் நம் இளைஞர்கள்.

உலகின் கொடுமுடியிலே தமிழர்களின் வேங்கைக் கொடி பறந்தது; கங்கைநதி தீரத்திலே-கடாரத்தின் கோட்டை மதில்களிலே தமிழ்க் கொடி பறந்தது. விரி கடலைத் தாண்டி பல நாடுகளில் தமிழ்க் கொடியைப் போற்றிப் பெருமை தேடிக் கொடுத்தவர்கள் தமிழர்கள்.

காடு திருத்தி - கடிய நிலம் திருத்தி - கழனி 'அமைத்து கன்னலும், செந்நெல்லும் கரும்பும் பயிரிட்டவர்கள் தமிழர்கள். வீதி சமைத்து விண்ணையளாவும் மாடமாளிகைகள் கட்டியவர்கள் தமிழர்கள். சிற்பச் சாலைகளையும்-சித்திரச் சாலைகளையும் கட்டியவர்கள் தமிழர்கள். இசைக் கருவிகளையும்-இசையரங்குகளையும் சமைத்தவர்கள் தமிழர்கள்.

ஆழ்கடலில் மூழ்கி அழகிய முத்தெடுத்து அணிசெய்து அகிலத்துக்கு வழங்கியவர்கள் தமிழர்கள். அம்முத்தை சாராயத்தில் ஊறவைத்து மேனியைத் தங்க நிறமாக்கிக் கொண்டவர்கள் மேனாட்டவர்கள். ஒரு சிறு குழாயினுள்ளே ஒன்பதினாயிரம் கஜம் துணியை அடைத்து அனுப்பிய பெருமைக்குரியவர்கள் தமிழர்கள். நாமாக நமக்குத் தேடிக்கொண்ட பெருமைகளல்ல. இவை கல்வெட்டுகளும், செப்புச் சாதனங்களும், மண்ணில் மறைந்து போன பண்டைய நாகரிகச் சின்னங்களும் உலகுக்கு இப்பேருண்மைகளைச் சொல்லிக்கொண்டு இருக்கின்றன.

இலங்கை மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்கச் சார்பில் புலவர் வி. கீ. கந்தையா தலைமையில் ஆசிரியர் கண்ணதாசன் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி.

-1-ம் பக்கத் தொடர்ச்சி-

"உம்...உம்....இல்லையடி! அப்போது பின்புறம் திரும்பி நின்று கொண்டிருந்தேன் நான்!"

"சரி! அவர் உன்னைத் தன் திருமார்பகலத்தில் சேர்த்துத் தழுவியபோது...?"

"அப்போது.......அப்போது...... நாணித்தலைகுனிந்து மார்பில் பதிந்தேனடி!"

"சரி! அதுவும் போகட்டும்! 'அந்த'ச் சுவை பெறும் ஆனந்த நேரத்தில்...?"

"அப்போது......எப்படியடிசொல்வேன்! கொள்ளை இன்பம்! குறையாத மயக்கம்! கண்களை மூடியபடியே இருந்துவிட்டேனடி!"

"ஆக...பார்க்கவில்லை! நல்ல பெண்ணடி நீ! எல்லாம் முடிந்தது கல்யாணத்தில் என்றாலும். என்ன பாக்கி என்றபோது 'மாலை சூடுதல்' என்றாலும்!"-தலைவிக்கும் தோழிக்கும் இதுபோன்ற பேச்சு நடக்கிறது. ஊடல் - புலவி - கலவி-கதையே முடிந்துவிட்டது! ஆனால் கதாநாயகன் முகத்தைக் கதாநாயகி காணவில்லை. கற்பனையில், தமிழ்ப்பண்பு விரவிக்கிடக்கிறது. நாணம் மிகுந்த தமிழ் மாதுநளின முகம் காட்டுகிறாள்! இந்தக் கற்பனைச் சிறப்பு உலக இலக்கியங்களில்-வேறு மொழிகளில் - எது? தமிழன் என்ற பெருமையால் நிமிர்ந்து கேட்கிறேன்; எது? எங்கே இருக்கிறது?

அந்தப் பாடல் இது:

புலவி புறங்கொடுப்பன்;
புல்லிடினு ணிற்பன்

கலவி களிமயங்கிக்
காணே-னிலவியசீர்

மண்ணாளுஞ் செங்கோல்
வளவனை யானிதன்றே

கண்ணாரக் கண்டறியா வாறு!

—முத். 95—

★ மதுக்கிண்ணம்! ★

"டக், டக், டக்" என்று குதிரை வரும் ஒலி கேட்கிறது. சிறிது நேரத்திற்குள் ஒரு இளம் வாலிபன் குதிரையொன்றின் மேல் வந்து அந்தப் பூந்தோட்டத்தினருகில் இறங்கினான். அவன் பூந்தோட்டத்தினுள் நுழைந்தான். அவன உள்ளே நுழைந்ததும் இரு பெண்கள் வெளியே வந்து அருவியின் அருகே அமர்ந்தனர்.

பூந்தோட்டத்தினுள்ளே — நுழைந்த வாலிபனை "அன்பே! என் நேரமாகி வந்தீர்கள்" என்று மூன்றும் பெண் - அந்த மாளிகை பிரபுவின் மகள்-கேட்டாள்.

"ஆம் கண்ணே! நேரமாகிவிட்டது. இனி விரைவில் வருகிறேன்!" என்று முடித்தான் அவ்வாலிபன்.

"அன்று, முதன் முதலில் நாமிருவரும் சந்தித்த இன்ப நாளை நினைத்தால் அத்தான் எத்தனை இன்பமேற்படுகிறது. இல்லையா தலைவா!" அப்பெண் இப்படிக் கூறினாள்.

"மெதுவாகக் கூறுகிறாயே! நினைக்குந்தோறும் நெஞ்சினிக்கிறது. உடனே உன்னைக் காணவேண்டும் என்று ஆவல் எழுகிறது. என்ன கூறுவேன். மற்றுமொரு முறை அந்த முதல் சந்திப்பை கூறுகிறேன் கேள். கண்ணே! அன்று, நான் அடுத்த நாட்டு அரசருக்கு அதிமுக்கியமான அஞ்சல் எடுத்துச் சென்றேன், மன்னனின் மதிப்பிற்கும், நம்பகத்திற்கும் உரிய நான், வழியில் இந்த அருவி வந்ததும் சற்று நீர் அருந்தி இளைப்பாறலாம் என்ற எண்ணத்துடன் இறங்கினேன்.

அப்பொழுது-யாரோ என்னை அணைத்தது கண்டு நிமிர்ந்தேன். பார்த்தால் நீ. கண்கள் கட்டப்பட்டு இருந்தன. புரிந்து கொண்டேன். நீங்கள் கண்களைக் கட்டிக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தீர்கள். தவறுதலாக நீ என்னை உன் தோழி என்று கட்டிப் பிடித்துவிட்டாய், நானும் உன் அழகில் மயங்கி அன்புப் பிணைப்பில் மெய்மறந்து உன்னை இறுக அணைத்தேன்.

பிறகு காதல் சேட்டைகள், அன்பு முத்தங்கள்!

நாம் முன்பு பார்த்த அந்த இளம் வாலிபன் "லாகின் வர்" என்பவன். வெகு வேகமாக குதிரையில் வருகிறான். மிக உயர்ந்த குதிரையின்மேல் அமர்ந்தவாறே முகத்தில் ஆவல், கோபம், மகிழ்ச்சி, வெறுப்பு மாறி மாறித் தாண்டவமாட வருகிறான். முன்கூறிய அந்த மாடமாளிகையினருகில் வந்ததும் இறங்கினான்.

அந்த மாளிகையிலிருந்து மணவிழாவிற்காக வாசிக்கப்படும் இசைக்கருவிகளின் ஓசை இன்பமாகக் கேட்கிறது. அந்த வீட்டு பிரபுவின் மகள் எலன் - லாகின் வரின் காதலி - அடுத்த ஊர் பிரபுவின் மகன்-வேலையேதும் செய்யாமல் குடித்து கும்மாளமிடும் கோழை - ஆகிய இருவருக்கும் முடிச்சுப் போட்டு விட்டார் அந்தப் பிரபு. லாகின்வர் மகளுக்குக்கூடத் தெரியாமல் நடத்திவிட்டு கடைசி நேரத்தில் கூறினார். இதை எப்படியோ அறிந்து லாகின்வர் வெகு வேகமாக வந்தான் குதிரையை ஓட்டியவாறே.

வேகமாக வந்த லாகின்வர் அந்த மாளிகையினுள் கம்பீரமாக நுழைந்தான்.

அவனைக் கண்ட அந்த வீட்டுப் பிரபு "இளைய பிரபு லாகின் வாரே! "சண்டையா அல்லது சமாதானமா, எந்த நோக்கத்தோடு வந்தாய் அல்லது மணப்பெண்ணுடன் சிறிது நடனமாடி வாழ்த்து கூறி செல்லவா?" என்று கேட்டார்.

"நான், அதிக நாட்களாகத் தங்கள் அருமை மகளை அன்புடன் காதலித்து வந்தேன். நான் இங்கு காதலை இழந்து வந்திருக்கிறேன். எதற்கு? ஓரே ஒரு நடனம் மணப்பெண்ணுடன் ஆடுவதற்கும் அழகு எலனின் உடல் நலத்திற்காக ஒரு கோப்பை திராட்சை ரசம் அருந்துவதற்கும்தான்.

திராட்சைக் கோப்பையை அழகு மணப்பெண் எலன் எடுத்து முத்தமிட்ட பகுதியில் வாயை வைத்து உறிஞ்சினான் லாகின்வர். கோப்பையை கீழே எறிந்தான்.

வெட்கத்தால் முகம் சிவக்க ஆனால் முகத்திலிருக்கும் ஏக்கம் மறைய, கண்களிலே கண்ணீருடனும், உதட்டிலே புன்னகையுடனும் அழகு எலன், லாகின் வரை நோக்கினாள். அது அவனுக்கு ஒருவித சைகை.

கம்பீரத்துடனும், பயமேதுமின்றி எலனின் மெல்லிய கைகளைப் பற்றிக்கொண்டு நடனமாட ஆரம்பித்தான் லாகின்வர்.

அவர்கள் நடனமாடிக்கொண்டே தெருவாயிற் படியருகில் வந்ததும் எதிர்பாராதவாறு தன் காதலியை நின்றுகொண்டிருந்த தன் குதிரையின்மேல் மெல்ல-ஆனால் விரைவாக அமர்த்தி தானும் அமர்ந்து "அவள் கிடைத்துவிட்டாள். எனக்கே சொந்தம். நாங்கள் செல்கிறோம்" என்று கத்தியவாறே குதிரையை விரைவாகச் செலுத்தினான்.

யாரும் எதிர்பார்க்கவில்லை, உடனே சமாளித்துக்கொண்டு சில பலர் லாகின்வரையும், எலனையும் துரத்தக் குதிரைமேல் ஏறினர்.

முயற்சி தோல்வியடைந்தது. லாகின்வரும் எலனும் எங்கோ மறைந்துவிட்டனர். தேடச் சென்றவர்கள் திரும்பி வந்தனர் தோல்வியுடன். லாகின்வரும், எலனும் இன்பமாக வாழ்ந்தனர்.

வி. ஆர். மதனகோபால் பி. காம்.

பன்மொழிப் புலவர். கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி

பதில் தருகிருர்

அழ. இளவழகன், பண்ணைக்காடு.

தாங்கள் 12-11-55 தேதி தென்றல் கேள்விப்பெட்டியில் திருக்குறள், தொல்காப்பியம், சங்கநூல்கள் முதலிய நூல்களில் வடமொழிச் சொற்கள் இல்லையென்று கூறியுள்ளீர். புலவர் ஒருவர், சந்திரன், சூரியன், காரணம் என்ற சொற்கள் வடமொழிச் சொற்கள் என்றுகூறியுள்ளார். அவர் கூறிய படி பார்த்தால் காரணம் என்ற வடசொல் திருக்குறளில் காணப்படுகிறது. உதாரணமாக ஒரு குறள் கீழே தரப்பட்டுள்ளது. இன்னும் பல குறள்களில் காரணமென்ற சொல் கையாளப்பட்டுள்ளது. குறள் 270, அதிகாரம் 27 தவம்.

"இலர்பல ராகிய
காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்"

சமஸ்கிருதம், வடமொழி, ஆரியம் ஆகியவை ஒரு பொருட் சொற்களாக இன்று திட்பமின்றி வழங்குகின்றன. சமஸ்கிருதம் கி. பி. நான்காம் நூற்ருண்டுக்குப் பிற்பட்ட இலக்கிய மொழியையே குறிக்கும். அது, பல பழங்கால மொழிகளின் சொற்களையும் மரபுகளையும் இணைத்த ஒரு இடைக்கால மொழியே. சங்க இலக்கியம், திருக்குறள், தொல்காப்பியம் ஆகியவைஇயற்றப்பட்ட காலத்தில் இந்த சமஸ்கிருத மொழியோ சமஸ்கிருத இலக்கியமோ இருந்ததில்லை. ஆகவே தமிழ்ச் சொற்கள் சமஸ்கிருதத்தில் புகுந்திருக்க முடியுமே தவிர, சமஸ்கிருதச் சொற்கள் அக்காலத்தில் தமிழில் புகுந்திருக்க முடியாது. காரணம், நீர், மீன் முதலிய சொற்கள் தமிழிலிருந்தும் பிற திராவிட மொழிகளிலிருந்தும் சமஸ்கிருதம் நேராகவோ மற்ற வேதமொழி, பாளி முதலிய பண்டை மொழிகளின் மூலமாகவோ எடுத்துக்கொண்ட சொற்களே.

தமிழ்நெஞ்சன், காங்கை.

தொல்காப்பியம், சொல்லதிகாரத்தில் 401 வது நூற்பாவாக வுள்ள,

"வடசொற்கிளவி வடவெழுத்
தொரீஇ,
எழுத்தொடு புணர்ந்த
சொல்லா கும்மே"

என்ற சூத்திரத்திற்குத் தங்கள் உரை விளக்கமும் சேனவரையர் உரையாசிரியர் ஆகியோர் அச்சூத்திரத்திற்குக் கூறும் உரை பற்றித் தங்கள் கருத்தையும் அறிய விழைகிறேன்.

உரையாசிரியர்களுள் முற்பட்டவர் இளம்பூரணர். இடைப்பட்டவர் சேனவரையர். (ஆரிய இன எழுச்சிக் காலத்தின் சின்னம் அவர்) பிற்பட்டவர் நச்சினர்க்கினியர். மூவர் உரைகளும் கீழே தரப்படுகின்றன,

இளம்பூரணர் உரை

வடசொற் கிளவி எனப்படுவது ஆரியத்துக்கே உரிய எழுத்தினை ஒரீஇ (விலக்கி) இருதிறத்தார்க்கும் பொதுவாய எழுத்தினையுடையவாகும் சொல் என்றவாறு

அவை உலகம், குங்குமம், நற்குணம் என்னும் தொடக்கத்தன.

குங்குமம் என்றவிடத்து இருசார்க்கும் பொது எழுத்தினன் வருதலுடைமையும், ஆரியத்தானும் தமிழானும் ஒரு பொருட்கே பெயராகி வழங்கி வருதலுடைமையும் அறிக.

சேனவரையர் உரை

வடசொற் கிளவியாவது வடசொற்கே உரிய எனப்படும் சிறப்பெழுத்தின் நீங்கி இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தானியன்ற சொல்லாம் என்றவாறு.

எனவே பொதுஎழுத்தானியன்ற வடசொல்லும் செய்யுள் செய்தற்குச் சொல்லாம் என்றவாறுயிற்று.

அவை வாரி, மேரு, குங்குமம், மணி என்னும் தொடக்கத்தன,

வடசொல்லாவது வடசொல்லோடு ஒக்கும் தமிழ்ச்சொல் என்றுரால் உரையாசிரியர் எனின்-அற்றன்று. ஒக்கும் என்று சொல்லப்படுவன ஒருபுடையான் ஒப்புமையும், வேற்றுமையுமுடைமையான் இரண்டாகல் வேண்டும். இவை எழுத்தானும் பொருளானும் வேறுபாடின்மையாகிய ஒரு சொல். இலக்கணம் உடைமையான் இரண்டு சொல் எனப்படா. அதனுல் ஒத்தல் யாண்டையது ?

ஒரு சொல்லாயினும் ஆரியமும் தமிழும் ஆகிய இடவேற்றுமையான் வேருயின எனின், அவ்வாருயின் வழக்கும் செய்யுளுமாகிய இடவேற்றுமையால் சோறு, கூழ் என்னும் தொடக்கத்தனவும் இரண்டு சொல் ஆவான் செல்லும். அதனுன் இடவேற்றுமையுடையவேனும் ஒரு சொல்லிலக்கணமுடைமையான் ஒரு சொல்லேயாம்.

ஒரு சொல்லாய வழி தமிழ்ச் சொல் வடபாடைக்கண் செல்லாமையானும், வடசொல் எல்லாத் தேயத்துக்கும் பொதுவாகலானும் அது போலி உரை என்க.

அல்லதூஉம் அவை தமிழ்ச் சொல்லாயின் வடவெழுத்தொரீஇ என்றல் பொருந்தாமையானும் வடசொல்லாதல் அறிக.

நச்சினர்க்கினியர் உரை

வடசொல்லாகிய சொல் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் கூறும் வடஎழுத்துக்களின் நீங்கி இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தான் இயன்ற சொல்லாகும் என்றவாறு.

அவை வாரி, மேரு, குங்குமம், மணி, மானம், மீனம், வீரம், வேணு, காரகம் என்றுற்போலச் சான்ருேர் செய்யுட்கண் வருவன.

இனி ஒழிந்தோர் செய்யுட்கண் வருவன கமலம், அமலம், மூலம், கோபம், ஞானம், ஞேயம், தமாலம், தாரம், திலகம், நாமம், யானம், யோனி உற்பவம் இவை போல்வன பிறவுமாம்.

உரை விளக்கம்

தொல்காப்பியத்துக்குப் பத்து உரைகள் இருந்தன என்று கூறப்படுகிறது. நமக்குக் கிட்டியவை நான்கைந்தே. அவையும் முழுவடிவில் கிடைக்கவில்லை. கிடைத்த உரையாசிரியரில் முற்பட்டவர் இளம்பூரணர். அவர் உரைகளிலிருந்தே அவருக்குமுன் பல உரையாசிரியர்கள் இருந்தனர் என்றும், அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகளும் மயக்க தயக்கங்களும் இருந்தன என்றும் அறிகிருேம். அத்துடன் இவ்வளவுக்குப் பின்னும் இளம்பூரணரே விளக்காது விட்ட பகுதிகளும் வழக்கிறந்தன என்று கூறும் பகுதிகளும் பல. இவற்றுல் தொல்காப்பியர் காலத்துக்கும் உரையாசிரியர் காலத்துக்கும் இடையே நீண்ட நாட்கள் இடையீடு இருந்தது என்றும், மரபுகள் தொடர்பறுந்து விட்டன என்றும் அறிகிருேம். ஆரிய மரபு வந்து மேலும் குழப்பமூட்டிற்று. இக்குழப்பம் மிகுதியடைவதை, கால முறையில் வரிசைப்படுத்தப்பட்ட மூன்று உரையாசிரியர்கள் உரையும் இச்சூத்திரத்தில் காட்டுகின்றன.

இளம்பூரணர் வடசொற்கிளவி என்பதை சமஸ்கிருதச் சொல் என்று ஏற்ருர். ஆனல் தமிழில் வழங்கும் சமஸ்கிருதச் சொற்கள் இருமொழிக்கும் பொது என்ருர். இவை சமஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கு வந்தன என்பதை அவர் மறுக்கவில்லை. இந்த நிலையில் கூட ஆரிய இன எழுச்சி உச்சநிலை அடைந்த காலத்தில் வாழ்ந்த சேனவரையர் அவர்மீது சாடுகிருர். அச்சொற்கள் இரு மொழிக்கும் பொதுவல்ல. உலக வழக்கில் வழங்காமல் செய்யுள் வழக்கில் மட்டும் தமிழில் வழங்கும் சமஸ்கிருதச் சொற்கள் அவை என்று சமஸ்கிருத உரிமையை வற்புறுத்துகிருர்.

சேனவரையருக்கு முற்பட்ட தமிழாசிரியர்களை நச்சினர்க்கினியர் தமிழ்ச் சான்ருேர் என்று பிரித்துக் காட்டி அவர்கள் வழங்கிய சமஸ்கிருதச் சொற்களுடன் அவர் காலத்திலும் பின்னும் உள்ள புலவர்கள் (ஒழிந்தோர்) வழங்கிய சமஸ்கிருதச் சொற்களை எடுத்துக் காட்டினர். உரையாசிரியர்களின் காலங்களில் உலக வழக்கிலில்லாமல் செய்யுள் வழக்கில் மட்டுமே புதிதாக சமஸ்கிருதத்திலிருந்து கம்பர் போன்ற கவிஞர்கள் புதுச்சொற்களைப் புகுத்தினர்கள் என்று தெரிகிறது. இவை நச்சினர்க்கினியருக்கும் சேனவரையருக்கும் இளம்பூரணருக்கும் ஓரளவு இலக்கியமாகலாமே தவிர, தொல்காப்பியருக்கு இலக்கியமாக முடியாது என்பது தெளிவு.

உண்மையில் சங்க இலக்கியமும் திருக்குறளும்கூட தொல்காப்பியத்தைப் பின்பற்றிய இலக்கியங்களே அன்றி, தொல்காப்பியத்துக்கு இலக்கியமாக மாட்டா.

தொல்காப்பியத்துக்கு இலக்கியம் இறந்துபட்ட தொல்காப்பிய கால இலக்கியமும் தொல்காப்பியத்துக்கு முற்பட்ட இலக்கியமும் மட்டுமே. அவை எல்லாம் அழிந்துபோனதனுல் இன்று நமக்கிருக்கும் தொல்காப்பியத்துக்குரிய இலக்கியம் தொல்காப்பியம் ஒன்றே.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட சூத்திரத்திற்கு நாம் கூறத் தகும் பொருள் அறிஞர்களுள் பா. வே. மாணிக்க நாயகர் ஒருவரே சுட்டிக் காட்டியுள்ள பொருளேயாகும்.

மாணிக்க நாயகர் மரபில் தரக்கூடிய உரை

வடசொல் என்று சொல்லப்படுவது சார்பு எழுத்துக்களால் (ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம்) தனிப்பட அறிஞர் நூல்களில் குறிக்கப்படும் தனி ஒலிகளை நீக்கி, தமிழ் முதலெழுத்துக்களால் (உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு) அறிவுத்துறைச் சொற்களாகும். இக்கருத்து மேலும் ஆராயத்தக்கது.

பம்பாயில்
கண்ணதாசன்
நிகழ்ச்சிகள்

24-12-55	பம்பாய் வருகை
25-12-55	ஆமதாபாத் நிகழ்ச்சிகள்.
26-12-55	பம்பாயில் ஓய்வு
27-12-55	கோரேகான்
28-12-55	கோலபா
29-12-55	அந்தேரி
30-12-55	தாராவி
31-12-55	பொது உறுப்பினர்கள் கூட்டம்
1-1-56	மாதுங்கா.

வருகிறது !

பெண் குலத்துப் பெருமையை விளக்க,
பெண் மோகம் கொண்டலையும் பேயர்களுக்குப் புத்தி புகட்ட,
பண்டைத் தமிழ் நாட்டின் பண்பை எடுத்துக் காட்ட,
பார் முழுதும் நீதியை நிலை நாட்ட
S. K. T. பிலிம்ஸார் அளிக்கும்
இணையற்ற திரை ஓவியம்
"தீர்ப்பு"
(KING OF ACTIONS) S. C. சேகர் நடிப்பது
கதை, வசனம் : பேரா S. G. நடராஜ்

அடுத்த இதழில்
ஈழநாட்டில் ஈராறு நாட்கள்
பொங்கல் மலர்
முழு அறிவிப்பு
சிலம்பு வழங்கும் செல்வம்
குறிப்பு :- அடுத்த இதழ் தாமதமின்றிக் கிடைக்கும்.

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 20-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம் மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

20 'கண்' எனும் சொல் மும்முறை வருதல்

பண்ணே பரவசமே பாகுநிலை பெற்றவளே
விண்ணே மலர்ந்திட்ட வெண்மதியே-கண்ணேயான்
உன்னை மறவேன் ஓவியமே கண்ணம்மா
என்னைஏற் பாய்கண் ணே!

—இரா. இளங்கவி, கண்டர்கோட்டை.

★

கண்மணியே! நீவா களம்நோக்கிச் செல்வார்பின்
புண்பெறினும் அஞ்சாதே போருக்கு-கண்ணனைய
நந்தமிழைக் காத்தல் நமதுகடன்; வெற்றிபெற
சிந்தையொடு கண்களிக்கும் சேர்ந்து.

—ப. விசுவநாதன், காளை.

★

இன்பம் குலைந்திடுக்கண் எய்திடினும் என்மனையாள்
துன்பக்கண் ணீர்சொரிந்து சோர்ந்திடினும் பின்போகேன்
ஆரியத்தின் வேரை அடியோடே பேர்த்தெடுக்கும்
காரியத்தில் கண்ஆவேன் காண்.

—பி. ஆர். சின்னகிருஷ்ணசாமி, அப்பியாபாளையம்.

★

கண்ணீரும் கம்பலுமாய் காரிகைகைப் பிள்ளையுடன்
உண்ணீரும் இல்லா(து) உலர்கையிலே-கண்ணொடுத்தும்
நோக்கா தரசியலார் நாடும் வரிப்பணந்தான்
காக்குமோ கண்ணீரைச் சொல்!

—காப்பியனார், வேலூர்.

★

இடுக்கண் விளைக்கும்; எதிர்நோக்கின் உள்ளம்
வடுக்காணும்; ஓர்நிலைக்கண் நில்லா(து)-அடுதொழிலில்
ஊனுண்ணும் வேலொக்கும்; ஒண்டொடியார் கொண்டுள்ள
கானுறையும் மான்பழிக்கும் கண்.

—அழ சிதம்பரம், தாம்பரம்.

★

கண்ணென்றாய் பொன்னென்றாய் கைவிட்டுச் செல்கின்றாய்
கண்கலங்கி நிற்கின்றாள் காரிகையாள்-கண்ணியமோ?
நம்பியுனைக் காதலித்த நல்லணங்கு நீயின்கண்
வெம்பிடவே விட்டு விடல்.

—ச. மு. சங்கரக்குமார், மீனாட்சிபுரம்.

★

"கண்மூடிக் கொள்கையெலாம் மண்மூடிப் போவதற்கு
பண்பாடிப் பாடுற்ற பாவலரைப்-பண்பின்றி
கண்ணற்றார் என்றிடித்துக் கூறுகின்ற காதகரைக்
கண்காணக் கூசுதே காண்.

—இளமுருகு, அருப்புக்கோட்டை.

★

"வண்டுறையுங் கூந்தல் வடிக்கண்ணாள் பாடினாள்
வெண்டுறையுஞ் செந்துறையும் வேற்றுமையாக்-கண்டறியப்
பொங்கரி யுண்கண்ணாள் பூவைக்கு மாறாகப்
பைங்கிளியைக் கற்பித்தாள் பாட்டு."

—சு. கந்தசாமி, கருப்பட்டிபாளையம்.

★

கண்ணின் மணிகளாம் கல்விசேர் மாணவர்கள்,
புண்படவே சுட்டுத் தொலைக்கின்றார்;-கண்மணியே!
வேலெடுத்து ஆட்சிசெயும் கண்ணிலா ராட்சியிதை
வாலறுத்துச் சூடுவேன் மாலை.

—இறைமுதல்வன், சின்னமுதலைப்பட்டி.

★

கண்பார்வை கெட்டவர்கள் கால்கை முடமானோர்
இந்நாட்டின் கண்உதவி இல்லாமல்-நொந்திரக்கும்
துன்பநிலை நோக்கித் துடித்துதவி செய்யார்க்கு
கண்இரண்டும் புண்ணென் றுரை

—குகன் குருசாமி, கமுதி.

★

கண்ணளிக்கும் கல்வி வயிறாரக் கஞ்சியுடன்
கண்ணிறைந்த நல்வாழ்வும் கைப்பொருளும்-கண்மணியே
தானுறைய ஓர்நிழலும் தாழ்ந்தோர் பெறும்நாளே
நானிலம் ஏத்துகின்ற நாள்.

வழித்துணைவன், சலவன்பேட்டை.

★

அங்கண் உலகத் தறிவொளியே! அந்நியரால்
எங்கண் புனல்வழிய இழிவுற்றாய்-நங்காய்! நீ
செங்கை தளையறுத்துத் தென்னன் மன்றின்கண்
மங்கா ஒளியுடனே வா!

க. மாணிக்கம், திருச்சி.

★

தென்னகத்துத் தேனமுதே! தீஞ்சுவையே! தொல்தமிழே
மின்னல்போல் இடுக்கண் விளைப்போரைக்-கண்டவுடன்
கண்ணைப் பிடுங்கி கழுகிற்கும் காக்கைக்கும்
உண்ணத் தருவேன் உவந்து.

—'முருகு சுப்பு', பெரமனூர்.

★

கண்ணனைய தாயகமாம் கன்னித் தமிழ்நாட்டில்
கண்ணிழந்து, கையேந்தும் அந்தகர்போல்-கண்மணியே!
வாழ்விழந்து அல்லலுறும் ஏழை உழவர்தம்
வாழ்வுயரக் கூறாய் வழி.

—சு. பழனிசாமி, கிரணத்தம்.

★

கண்ணிழந்தேன் சுற்றுகின்ற காலின் வலுவிழந்தேன்
பெண்ணே! யென் ஆசை பிதற்றுகிறேன்-கண்ணும்
தமிழகத்தை ஆரியரின் தந்திரத்தின் நீக்கிக்
கமழ விளக்கிடுதல் கண்.

—மா. நாராயணசாமி, கோனூர்.

★

பாராளும் இந்தியென்று பண்டிதரே! தென்னாட்டில்
கூறாதீர் செந்தமிழைக் கொல்லாதீர்!-மாறாத
கண்ணோடு இந்நிலையைக் களைந்தெறியும் கருமமே
கண்ணுவோம் இந்நாட்டின் கண்.

—அ.ச. பாலு, பொள்ளாச்சி.

★

இருட்டின்கண் கண்தெரியும் தன்மையுண்டோ? [இங்கிதுபோ
புரட்டுக்கள் புரிந்தேய்க்கும் புலவர்தமை-வெருட்டாதுன்
அறிவுக்கண் தனைமாய்த்து அழிவுக்கண் தேடுவையேல்
வறுமைக்கண் மாய்க்கும் வழி.

—ப. தாமரைச்செல்வன், உடுமலை.

★

பிஞ்சில் பழுத்த பழமென்போர் கண்ணிய
பஞ்சத்தால் கூறுகின்ற பேதையாவர்-நெஞ்சமே
கண்மூடி வாழுமவர் கண்திறந்து, நற்றமிழ்ப்
பண்புடன் சேர்த்தல் பணி.

—வை. இராசமாணிக்கம், வலகை.

★

"அங்கண்மா ஞாலத்து ஆய்ந்த பொருளுடைமை
தங்கண் அமர்வுடையார் கண்ணே-தங்குதலான்
ஐம்புலன் தானவிழ்த்து அல்லற்பட் டாணவத்தால்
வெம்புதல் வேண்டாமென் றுரை."

—கே. எம். ராஜன், அரசம்பட்டி.

★

கண்ணைப்போல் பெண்வளர்த்தும் கைப்பிடித்துக் காளையிடம்
பெண்ணைக்கொள் என்றிடப்பு ரோகிதமேன்?- [கண்ணேநாம்
கற்போடு நற்களவுங் கண்டபின் அன்புமணம்
பொற்போடு காண்போம் பொறு.

—பனை. சண்முகம், நெற்குப்பை.

★

தென்னகத்தின் மூவேந்தர் தம்முயிராய்க் காத்திட்டார்
கண்ணனைய நம்மொழியைக் கண்மணியே-தன்னலத்தால்
அன்னவரின் நற்றொண்டை மாய்த்தொழித்து வாழ்வாரைக்
கண்ணின்றிச் செய்திடுவேன் காண்!

—உலக. முருகேசன், வடுவூர்.

★

அங்கண் விசும்பணங்கோ ஆரணங்கோ பொற்கொடியோ
பங்கயக்கை விற்றடங்கண் பாவையிவள்-பங்கமிலாக்
காரிடையே கண்டேன் ககன-முழுமதியை...
ஆரிடையே செல்வே னகம்.

ரா. பக்கிரிசாமி, வலங்கைமான்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.